# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
வைகாசி 21
ஜமா. ஆகி. 27
ஞாயிறு (4-6-1978)
நிறுவியது 1947
புத்தகம் 32
இதழ் 1
யாழ்: தொ.பே.இல. 352
விலை சதம் 60


- சிங்களம் மட்டுமே தொடர்ந்து உத்தியோக மொழி!
- சிங்களக் குடியேற்றப் பிரச்சினைக்கு தீர்வு இல்லை!
- சுயநிர்ணய உரிமையோ, சுயாட்சியோ கிடையாது!

# அரசியலமைப்புத் திருத்தங்கள்

# தமிழர்களுக்குப் பட்டை நாமம்!

## ஜனதிபதியின் வாக்குறுதிக்கு அதோகதிதானு?

நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்டு வந்த உத்தேச அரசியலமைப்புத் திருத்தங்கள் பெரும்பாலும் இப்போது அம்பலத்துக்கு வந்துவிட்டன. இத் திருத்தங்கள் எதுவும் தமிழ்மக்களின் அபிலாஷைகளை ஈடுசெய்யத் தவறியதுடன், வெறும் கண்துடைப்பாகவே காணப்படுவதாக தமிழ் அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, அல்லது சுயாட்சியை அங்கீகரிக்க இத்திருத்தங்கள் தவறிவிட்டதுடன், தமிழ் பேசும் மக்களின் மரபுவழித்தாயகத்தில் நடைபெற்றுவரும் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றப் பிரச்சினைத் தீர்வு காணும் வழிமுறை எதுவும் இத் திருத்தங்களில் இடம்பெருமை, தமிழ்மக்கள் மத்தியில் பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

1972ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அரசியலமைப்பைத் திருத்தியமைக்கப் போவதாகவும், அப்படி திருத்தியமைக்கப்படும் போது தமிழ் மக்களின் அபிலாஷைகளும் நிறைவுசெய்யப்படுமென்றும் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் கூறிவந்தது; ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்கள் முன்பு பிரதமராக இருந்தபோது திரும்பத் திரும்ப இந்த உறுதிமொழியை தேசிய அரசுப்பேரவையிலும் வெளியிலும் அளித்துவந்தார்.

சோசலிச நாடுகளில் தேசிய இனங்களுக்கு பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை வழங்கப்பட்டிருக்கின்றன என்று தேசிய அரசுப் பேரவையில் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் சுட்டிக் காட்டியபோது, "அதே உரிமைகளை உங்களுக்கு நாங்கள் ஏன் தரமாட்டேன் என்று நினைக்கிறீர்கள்?" என்று திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன திருப்பிக்கேட்டிருந்தார்; உறுதிமொழி தந்தார்.

எனவே உத்தேச அரசியலமைப்புத் திருத்தங்கள் முழு உருவத்துடன் வெளியே வரும்வரை நேரடி நடவடிக்கை எதிலும் ஈடுபடாமல் தமிழர்விடுதலைக் கூட்டணியும் பொறுமையைக் கடைப்பிடித்து வந்தது.

இப்போது அரசியலமைப்புக்கு கொண்டு வரப்படவிருக்கும் உத்தேசதிருத்தங்கள் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டுவிட்டன. இத் திருத்தங்கள் எதுவும் தமிழ் மக்களின் அபிலாஷைகளையும், பிரச்சினைகளையும் கொஞ்சம்கூட ஈடுசெய்வதாக காணப்படவில்லை.

### சிங்களம்மட்டுமே ஆட்சிமொழி!

தமிழ்மக்களை இரண்டாந்தர அடிமைநிலைக்குத் தாழ்த்தியுள்ள ஏகாதிபத்தியமொழிச் சட்டமான சிங்களம் மட்டும் சட்டம் அப்படியே ஓர் அட்சரமும் மாற்றப்படாமல் அரசியலமைப்பில் இருக்கப்போகிறது; அதாவது நாடுமுழுவதற்கும் சிங்களமே ஆட்சிமொழியாக இருக்கும். தமிழுக்கு ஆட்சிமொழி அந்தஸ்து வழங்கப்படமாட்டாது; அதே சமயம், தமிழுக்கு வெறுமனே 'தேசிய மொழி' என்ற அளவில் கண்துடைப்புக்காக குஞ்சம் கட்டப்படுகிறது.

### தமிழின் அந்தஸ்து

வடக்கு, கிழக்கில் உத்தியோகமொழியான சிங்களத்தை பேசுவோர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் தமிழ் மொழியும் ஓர் நிர்வாக

—5ம் பக்கம் பார்க்க

## சிவகுமாரனின் தியாகத்தை வணங்குவோம்!



சிவகுமாரன்—ஈழத்தமிழர்களின் நெஞ்சில் என்றும் இடம்பெற்றுவிட்ட வீர வேழம்!

மானம் இழந்து தலைசாய்ந்து மாற்றூர்க்கடிமைத் தொழில்செய்து கூனல் விழுந்த தமிழர் வாழ்வின் கொடுமை தீர்க்கப் புறப்பட்டு, அப்பணியிலே தன்னுயிரைத் தந்திட்ட தியாக மறவன் சிவகுமாரன்!

தமிழனின் ஈனநிலை துடைக்கப் புறப்பட்ட அவன் 1974 ஆனி ஐந்தில் தன்னையே களபலியாகத் தந்து வரலாற்று நாயகனுனன்!

அவனது எழில் சிலை அவனது ஊராகிய உரும்பராயில் தருக்கர்களால் இன்று தலைகீழாகத் தொங்கவிடப்பட்டபடி காணப்பட்டாலும், தலைகீழாகிப் போன தமிழர் வாழ்வை நிமிர்த்தி வைக்க புறப்பட்டவன் அவன்!

தலைகீழாகித் தொங்கிக்கொண்டிருக்கும் அவன் சிலை தலைகீழாகிக் கிடக்கும் தமிழரின் இன்றைய அடிமை வாழ்வுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

ஆனி ஐந்தில் அந்த தியாகியை எண்ணுவோம்!

விடுதலைப் பலிபீடத்தில் தன்னையே அர்ப்பணித்த அந்த வீரனின் கல்லறையை வேம்பன் மயானம் சென்று வணங்குவோம்!

அவன் ஈடிணையற்ற தியாகத்தை எண்ணி எண்ணிச் சிந்து பாடுவோம்!

அவனது இலட்சியமான சுதந்திரத்தமிழ் ஈழத்தை அடைந்தே தீருவோமென்று அவனது கல்லறை மீது உறுதியேற்போம்! →கோவை

## உள்ளே....

தேசிய அரசுப் பேரவையில் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கம் கோப்பாய் பா. உ. திரு. சி. கதிரவேற்பிள்ளை ஆகியோர் ஆற்றிய உரைகள் இடம் பெற்றுள்ளன. திருவாளர்கள் சிவசிதம்பரம், க. துரைரத்தினம், வி. என். நவரத்தினம் ஆகியோர் ஆற்றிய உரைகள் சுதந்திரன் இதழில்தொடர்ந்து வெளியிடப்படும்.' —ஆர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● தமிழ் ஈழப் புலிகள் தடைச்சட்டமூலத்தின்மீது தேசிய அரசுப் பேரவையில் 18.5.78 வியாழக்கிழமை இரவு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் நிகழ்த்திய நீண்ட உரையின் முதலாவது பகுதி இங்கு இடம்பெறுகிறது, —ஆர்.

# 'புலிகளுக்கு' எதிராக பொலிஸ்மா அதிபரால் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் யுத்தம் உண்மையில் தமிழ்மக்களுக்கு எதிரானதுதான்!'

"பிரதிச் சபாநாயகர் அவர்களே, ஓர் இயக்கத்தை தடை செய்யும் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பை கௌரவ நீதியமைச்சர் அவர்கள் இங்கே முன்மொழிந்தார். தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் என்று கூறப்படும் இயக்கம் வீரகேசரி என்னும் தமிழ்ப்பத்திரிகைக்கு அனுப்பியதாக சொல்லப்படும் கடிதமொன்றின் பிரதிமைப்படத்திலிருந்தே அந்த இயக்கத்தின் பெயரை அமைச்சர் எடுத்திருக்கிறார். இவர்கள் எல்லா அரசியற் கட்சிகளுக்கும் மேற்படி கடிதத்தின் பிரதிகளை அனுப்பி வைத்துள்ளனர் என்று நீதி அமைச்சர் இங்கே குறிப்பிட்டது ஒரு பெரிய தவறாகும். அவர்கள் கடிதத்தில் பயன்படுத்திய சில சொற்களின் விளக்கத்தை, (abreviations) கடிதத்தின் இறுதியில் விரித்துரைத்திருந்ததை அமைச்சர் இங்கு தவறாகப்படித்தார்.

பின்வருமாறு அதிலே காணப்படுகிறது—

TULF — தமிழர் விடுதலைக்கூட்டணி,

UNP—ஐக்கிய தேசியக் கட்சி,

SLFP—சிறீலங்கா சுதந்திரக்கட்சி,

KKS—காங்கேசன்துறை

VVT — வல்வெட்டித்துறை,

CID—குற்றவியல் விசாரணைத் திணைக்களம்,

MP — பாராளுமன்ற உறுப்பினர்.


மேற்படி கடிதத்தின் பிரதிகள் அனுப்பப்பட்ட ஆட்களின் அல்லது இயக்கங்களின் பெயர்கள்தான் இவ்வாறு கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாக அமைச்சர் எண்ணிவிட்டார். எங்கள் எவருக்கும் அவ்வாறு பிரதிகள் எதுவும் கிடைக்கவில்லை. எனவே எனக்குத் தெரியாது—கௌரவ அமைச்சர்...

கே; டபிள்யூ, தேவநாயகம்: கௌரவ உறுப்பினர் தனக்கு கடிதத்தின் பிரதி கிடைக்கவில்லையென்று கூறினாரென்றால் நான் அதை ஏற்றுக் கொள்ளுகிறேன்.

அமிர்; உண்மையில் இது ஒருவிசித்திரமான ஆவணம். கையெழுத்துக் காணப்படாத ஓர் ஆவணம். அதன் பிரதிமைப்படம்தான் ஒரு செய்திப்பத்திரிகையில் வெளிவந்திருந்தது.

காமினிதிசாநாயகா: மேற்படி ஆவணம் கையெழுத்திடப்படாதது என்று கூறுவது சரியல்ல; அதிலே ஒரு கையெழுத்து காணப்படுகிறது. ஆனால் அது தெளிவாகவில்லை!

அமிர்தலிங்கம்: அது கையெழுத்தல்ல—அதிலே ஓர் அடையாளம், ஓர் கிறுக்கல் காணப்படுகிறது. அது ஒரு வேளை புலியின் பிறண்டலாக இருக்கலாம்.



"அந்தவகையில் இந்த சட்டமூலம் தனித்தன்மை வாய்ந்தது. ஓர் இயக்கத்தை தடை செய்ய இச்சட்ட மூலம் அங்கீகாரம் கோருகிறது இப்படியொரு இயக்கம்இருப்பதாக எங்கள் அறிவுக்கும், இச்சபை உறுப்பினர்களின் அறிவுக்கும், இந்த நாட்டு மக்களுக்கும் அந்த இயக்கம் அனுப்பிவைத்ததாக கூறப்படும் ஒரேயொரு கடிதப் பிரதியிலிருந்தே தெரிய வந்துள்ளது. தடை செய்யப் படவேண்டுமென்று கோரப்படும் இப்படிப்பட்ட ஓர் இயக்கம், இயங்கிவருவது பற்றி வேறு எவருக்கும் எந்தத் தகவலும் தெரியாது.

பீ. சி. இம்புலான: அவர்கள் சுடுவதில் வல்லவர்கள்!

அமிர்: பொலிஸ் அதிகாரிகள் கொலை செய்யப்பட்டமைக்கு யார் பொறுப்பாளர்களோ அவர்களது இச்செயலையிட்டு நாம் வருந்துகிறோம் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை. எவ்வகையான வன்முறையையும் கண்டிப்பதில் நாம் அரசாங்கத்துடன் சேர்ந்து நிற்கிறோம். இதை நாங்களும் எமது கட்சியாகிய தமிழர் விடுதலைக் கூட்டணியும் திட்டவட்டமாக இச்சபைக்குள்ளும் வெளியேயும் எடுத்துக் கூறியிருக்கிறோம். எங்கள் இலட்சியத்தை அடைவதற்கு வன்முறையை ஓர் வழியாக நாம்என்றும் ஏற்றதில்லையென்று நாம் கொடுத்த உறுதிமொழியை தாம் ஏற்றுக்கொண்டிருப்பதாக பிரதமர் இச்சபையில் இன்றுகூட கூறியிருந்ததையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். எங்கள் இலட்சியத்தை வென்றெடுக்கும் போராட்டங்களை காந்திய அஹிம்சை வழியிலேயே நடத்துவது என்று நாம் உறுதிபூண்டுள்ளோம்,

சில விஷயங்களை இச்சபையில் நான் முழுமையாக எடுத்துக்கூறுவதற்கு சபை உறுப்பினர்கள் இடமளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

## புலிக் கவிதை

கடந்த சில கிழமைகளாக இந்த நாட்டிலுள்ள சகல பத்திரிகைகளிலும் பல்வேறு செய்திகளும், அறிக்கைகளும் வெளிவந்ததை தொடர்ந்து "புலிகள்" என்ற பெயர் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. உண்மையில் இது பிளாக்கெஸ் (BLAKESS) எழுதிய பின்வரும் கவிதை வரிகளையே நினைவூட்டுகிறது:—

"Tiger Tiger burning bright,
In the forest of the night"

## புலித்தடைச்சட்டமூலத்தின்மீது எதிர்க்கட்சித் தலைவர் உரை!

ஆனால் கௌரவ சபாநாயகர் அவர்களே, சில பெயர் குறிப்பிடப்படாத பொலிஸ் அதிகாரிகள், பெயர் குறிப்பிடப்படாத சில செய்தி நிருபர்களுக்கு கொடுத்திருந்ததாக சில பத்திரிகைகளில் வெளிவந்திருந்த செய்திகளையும், சில சந்தர்ப்பங்களில் பெயர் குறிப்பிடப்பட்ட பத்திரிகை நிருபர்களுக்கு, அளிக்கப்பட்ட செய்திகளையும், ஒருசேரசேர்த்துப் பார்க்கும்போது, அவையெல்லாம் ஒரு திட்டவட்டமான பாணியிலும், திட்டவட்டமான நோக்கத்துடனும் இருப்பதை காணமுடிகிறது. பத்திரிகைகளில் வெளிவந்திருந்த அப்படியான சில ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களையும், மறைமுக குற்றச்சாட்டுக்களையும் இச்சபையில் அலசவேண்டியது எனது கடமையாகும்.

## கட்டுக் கதை

பெயரிடப்படாத கட்சிகள், பெயரிடப்படாத இயக்கங்கள், பெயர் குறிக்கப்படாத தனிநபர்கள், எவ்வித அடிப்படையுமின்றி இதற்குள்ளே இழுத்துவரப்பட்டு, எந்த நோக்கத்துடனே எனக்குத் தெரியாது—"கட்டியெழுப்புதல்" நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதேமாதிரியான கட்டுக்கதைகளை கட்டியெழுப்புவதிலே 1958ம் ஆண்டு இனக்கலவரத்தின் முன்பு சில சக்திகள் ஈடுபட்டிருந்ததையும், அதன் விளைவாக 1958ம் ஆண்டு நடைபெற்ற பயங்கர இனக்கலவரத்தை இந்த நாடு கண்டது. 1977 ஆகஸ்ட்டில் இடம்பெற்ற நெஞ்சு நடுங்கும் பயங்கரத்தின் தாக்கங்களிலிருந்து நாம் இன்னும் முழுமையாக விடுபடாத நிலையிலிருக்கிறோம் -எனவே, இச்சபையின் பொறுப்பு வாய்ந்த உறுப்பினர்களாகிய நாம் எல்லோருமே எவ்வித அடிப்படையுமற்ற குற்றச்சாட்டையும் முன்வைக்காமலிருப்பது மிகவும் அவசியமாகும்.

## அரசாங்க சார்பு ஏடுகள்

ரைம்ஸ் நிறுவன பத்திரிகைகளும், லேக்ஹவுஸ் பத்திரிகைகளும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. 'சன்' குறூப் பத்திரிகைகளும் அரசாங்கத்துக்கு விசுவாசமாகவே வெளிவருகின்றன. எனவே அரசாங்கத்தின் சார்பில் வெளிவரும் இந்த மூன்று நிறுவனத்தின் பத்திரிகைகளிலும், பாரதூரமான குற்றச் செயலை விசாரிக்கும் பொலிஸ் அதிகாரிகளிடமிருந்து கிடைத்ததாக வெளியிடப்படுகின்ற அறிக்கைகள், சரியாக வெளியிடப்படுகிறதா என்பதை கவனிக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

உண்மையில், தமிழ் அகதிகள் மறுவாழ்வுக்கழகத்தை இதற்குள் இழுத்து விடும் முயற்சிகள், மதத்தலைவர்களை இழுத்துவிடும் முயற்சிகள், சில அரசியற் கட்சிகளையும் இதற்குள் இழுத்துவிட்டு, ஏதோ ஒருவகையில், நடந்துவிட்ட குற்றச் செயலுடன் அவற்றை தொடர்பு

—7ம் பக்கம் பாரக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழன் அன்று கள்ளத்தோணி அதே தமிழன் இன்று 'புலி'!"

## 'புலிகள்' மறைவதற்கு வழியென்ன? பேரவையில் கதிரவேற்பிள்ளை ஆலோசனை



**தமிழீழ விடுதலைப் புலிகள் தடைச்சட்டமூலத்தின்மீதுதேசிய அரசுப் பேரவையில் 19-5-78 வெள்ளிக்கிழமை கோப்பாய் பா. உ. சிந்தனைச்சிற்பி திரு. சி. கதிரவேற்பிள்ளை ஆற்றிய உரை இது—**

**நான்** இச்சபையில் அதிக நேரத்தை எடுக்க விரும்பவில்லை. இரண்டொரு குறிப்புக்களை மாத்திரம் இங்குசுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இச்சட்டமூலத்தின் 11வது பிரிவில் சொல்லப்பட்டிருப்பதன் பொருளை இச்சபை ஆராய்ந்து பார்க்க வேண்டும். 11வது பிரிவின்படி ஒருவரை முதலில் மூன்று மாதங்களுக்கும், தொடர்ந்து மேலும் மூன்று மாதங்களுக்கும்; இப்படியாக ஆகக்கூடியது ஓர் ஆண்டுக்காலம் தடுப்புக் காவலில் வைத்திருப்பதற்குவழிசெய்கிறது. ஆனாலும், அந்த 11வது பிரிவை நடைமுறைப்படுத்தும்போது. ஒருவரை அவரது வாழ்நாள் பூராவும் தடுப்புக்காவலில் வைக்க முடியும் என்பதை நீங்கள் உணர்ந்தீர்களா? ஏனெனில், 'X' என்பவர், Y என்ற குற்றத்தை செய்திருப்பார் என்று அமைச்சர் நம்புவதற்கு காரணங்கள் இருக்குமானல், அவரை ஓராண்டுக்கு தடுப்புக்காவலில் வைக்க முடியும் என்று அந்தப் பிரிவு கூறுகிறது. அதே 'X'என்பவர். A,B,C,D,E F. ஆகிய குற்றங்களையும் செய்துள்ளார் என்று அமைச்சர் கண்டுபிடிப்பாரானல். இத்தகைய ஒவ்வொரு குற்றத்துக்கும் ஒவ்வோராண்டு என்ற கணக்குப்படி விசாரணையின்றித் தடுப்புக்காவலில் அவரை வைக்க முடியும். எனவே ஒருவர் 20 குற்றங்களைச் செய்திருப்பதாக ஏதாவது ஒருகாரணத்தினல் அமைச்சர் கருதுவாரானல், அவரை 20 ஆண்டுகளுக்கு தடுப்புக்காவலில் வைக்க முடியும். இதை நீங்கள் உணர்ந்தீர்களா? இந்தப் பிரிவின் உட்பொருள் இதுதான். எனவே இதிலே கூறப்பட்டிருக்கும் 'ஓராண்டு'என்பதற்கு எந்தவித அர்த்தமும் இடையாது. அம்மாதிரியானதொடர்ச்சியான தடுப்புக்காவல் பற்றி, 'றிட்' மூலமாகவோ வேறு விதமாகவோ எந்த நீதிமன்றத்திலும் எவ்விதமான கேள்வியெழுப்புவதையும் 13வது பிரிவு தடை செய்கிறது.

ஐயா, சில மாதங்களுக்கு முன்னல், அன்று பிரதமராக இருந்த இன்றைய அதிஉத்தம ஜனதிபதி அவர்கள், இச்சபையில் எழுந்துநின்று, "நாங்கள் மக்களின் அடிப்படை உரிமைகளையும், சுதந்திரங்களையும் வழங்குவதற்காகத்தான் இங்கு வந்துள்ளோம். அவற்றை கூறுங்கள்; நான் அவற்றை உங்களுக்குத்தருவேன்" என்று கூறியது எனக்கு நினைவிருக்கிறது; ஆனல் இப்போது தரப்பட்டிருப்பதோ— அமைச்சர் யாராவது ஒருவரை உள்ளே வைக்க வேண்டுமென்று கருதுவாரானல், அவரை ஆயுட்காலம் முழுவதும் சிறைக்குள் வைத்திருக்க முடியும்! இது தான் மக்களுக்கு நீங்கள் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளும், சுதந்திரமுமாகும்!

11வது விதியின் முழுமையான தாக்கத்தை நீங்கள் உண்மையாக உணர்வீர்களானல்—அசைகின்ற, அசையாத சொத்துக்களைப்பற்றி நான் கவலைப்படவில்லை—ஆனல்மனிதனின் சுதந்திரம் எங்கே? நீங்கள் பல ஆண்டுகளுக்கு தடுப்புக்காவலில் ஒருவரை வைத்திருக்க முடியும்; ஆனல் இப்படிப் பாதிக்கப்படுபவருக்கு பரிகாரம் என்ன? எப்படி அவருக்கு சட்ட உதவி கிடைக்கும்? அவர் ஒரு சட்டத்தரணியை வைத்துக்கொள்ள அனுமதிப்பீர்களா? ஒரு பாராளுமன்ற உறுப்பினர் மூலமாக அவர் தனது வழக்கை எடுத்துக் கூறுவதற்கு அனுமதிப்பீர்களா?

காமினி: ஆம்,

கதிரவேற்பிள்ளை; நீங்கள் 'ஆம்' என்று கூறுகிறீர்கள்—ஆனல் இது இச்சட்ட மூலத்தில் இடம் பெற்றிருக்கிறதா? சட்டமூலத்தை புரட்டிப்பாருங்கள் தடுப்புக்காவலில் வைக்கப்படும் ஒருவர், வேறு எவரையும் சந்திக்கும் உரிமைபற்றி அதிலே ஏதும் கூறப்படவில்லை, அப்படி உரிமை வழங்குவது தான் உங்கள் நிலையென்றல், அதைச் சட்ட மூலத்திலே இடம் பெறச்செய்யுங்கள். தடுப்புக்காவலில் வைக்கப்படும் ஒருவர். தாம் விரும்பிய சட்டத்தரணியின் உதவியை நாடவோ, பாராளுமன்ற உறுப்பினர் மூலம் தமது வழக்கை எடுத்துரைக்கவோ முடியும் என்பதை இச்சட்டமூலத்திலே புகுத்துங்கள். நீங்கள் உங்களை மட்டும் முட்டாள்களாக்கவில்லை; நீங்கள் நாட்டையும், ஒவ்வொருவரையுமே முட்டாளாக்குகிறீர்கள். ஒருவர் ஏதாவது ஒரு இயக்கத்துடன் சம்பந்தப்பட்டவர் என்று யாராவது ஒரு பொலீஸ் அதிகாரி அறிக்கை கொடுத்தால், அதைஅமைச்சர் நம்பலாம். இதுவே இதிலுள்ள முக்கியத்துவமாகும்; இந்தச் சட்டமூலத்தை இங்கு முன்மொழிந்த நீதியமைச்சர் அதற்கான காரணங்களை இங்கே கூறிய போதிலும், இச்சட்டமூலத்தின் தலைப்பை வாசிக்கத் தவறிவிட்டார். அது பின் வருமாறு கூறுகிறது:—

"தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்குத் தடைவிதிப்பதற்கும், அதன் குறிக்கோளை எய்துவதற்கு வன்முறையைப் பயன்படுத்துமாறு பரிந்துரைக்கின்றதும், அரசின் பாதுகாப்புக்கு பங்கமானதாக இருந்து வருகின்றதுமான வேறேதும் அமைப்புக்குத் தடை விதிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய ஏதேனும் அமைப்பினலும், அத்தகைய அமைப்புடன் சம்பந்தப்பட்ட வேறு ஆட்களினலும் புரியப்படும் சட்ட விரோதச் செயற்பாடுகளைச் செவ்வையாகத் தடுப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன் அவற்ருேடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கும் ஆன ஒரு சட்டம்"

இப்போது ஐயா, நீங்கள் பிரச்சினைகளின் முன்னல் மண்டியிட வில்லையா? இப்போது இன்று தேசிய ஒருமைப்பாடு நிலவுகிறதா? அது இருப்பதாகத்தான் நீங்கள் கருதிக்கொண்டிருக்கிறீர்கள். அதுபற்றி சிந்தித்து பாருங்கள்,

இன்று 'தேசிய ஒற்றுமை' என்று ஒன்று கிடையாது. "ஒரே தேசம்" என்று ஒன்று கிடையாது இத்தீவில் இரண்டு தேசங்கள்—தேசிய இனங்கள்—இருக்கின்றன. நாங்கள் இணைந்து சேர்ந்து வாழ முடியவில்லை. அது நிர்வாணமாக தெரிகின்ற பச்சையான அரசியல் உண்மையாகும். அந்த உண்மையை ஜீரணிக்க உங்களால் முடியவில்லை.

'புலிகளை' எதிர்நோக்குவதாக நீங்கள் கருதிக்கொண்டு இருக்கிறீர்கள்! ஆனல், உங்கள் கண் முன்னல் தெரிகின்ற உண்மையையே உங்களால் எதிர்கொள்ள முடியவில்லை. இத்தீவில் இரண்டு நாட்டினங்கள் வாழுகின்றன; பிரிட்டிஷார் கட்டிவைத்த இணைப்புக்குள் நின்று, அவர்களால் ஒன்ருக வாழமுடியவில்லை; 1833ல்— இந்தத் தீவிலுள்ள இரண்டு தேசங்களையும், மக்களையும் வெள்ளைக்காரன்தான் ஒன்ருக இணைத்தான்!

கல்வியமைச்சர் அவர்கள் தமது பேச்சின்போது, பிரிட்டிஷாருடன் செய்துகொள்ளப்பட்ட கண்டிய ஒப்பந்தத்தின் விளைவாக கண்டிமக்கள் இழந்த உரிமைகளை மெல்ல மெல்ல மீளவும் பெற்றுக்கொள்வதற்கு தாங்கள் முயற்சியெடுப்பதுபற்றிக் குறிப்பிட்டார். நாமும், அதையேதான் அஹிம்சை வழியில் செய்துகொண்டிருக்கிருேம்.

நிசங்காவிஜயரத்தின:- நான் அதை விளங்கப்படுத்தட்டுமா?

கதிரவேற்பிள்ளை:- விளக்கங்களைக் கேட்பதற்கு எனக்கு விருப்பம்தான். ஆனல் எனக்கு நேரம்தான் இல்லை. எனினும் நீங்கள் கூறவிரும்புவதை கூறலாம்.

நிசங்காவிஜயரத்தின:-1948ம் ஆண்டு சுதந்திரச் சட்டத்தின் முன்பு, கண்டி மக்களைப் பொறுத்தவரை, கண்டி உடன்பாட்டில் செய்து கொள்ளப்பட்ட உரிமைகள் யாவும் புதிய அரசியல் திட்டத்தில் இடம்பெறும் என்று பிரிட்டிஷ் அரசாங்கப் பிரதிநிதியால் உறுதிமொழிதரப்பட்டது. இதுசம்பந்தமாக டி. எஸ். சேனநாயகா, எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயகா போன்றவர்களுடன் தனிப்பட்ட முறையில் விவாதம் நடந்ததாக நான் அறிகிறேன்.

கதிரவேற்பிள்ளை:- நான் உங்கள் விளக்கத்துடன் உடன் படுகிறேன்.

நிசங்காவிஜயரத்தின: தமிழ் மக்களைப் பொறுத்தவரை, அவர்கள் பிரிட்டிஷ் காலனித்துவ பேரரசுக்குள் முழுமையாக அகப்பட்டுக் கொண்டார்கள். ஏனெனில், யாழ்ப்பாணப் பிரதேசத்தை முதலில் போர்த்துக்கீயரும், பின்னர் ஒல்லாந்தரும் அதன் பின்னர் பிரிட்டிஷாரும் யுத்த முனையில் கைப்பற்றிய உரிமையைக் கொண்டு ஆண்டு வந்தார்கள்; ஆனல் கண்டி மக்களைப் பொறுத்தவரை அவர்கள் ஓர் உடன்படிக்கையின் அடிப்படையிலேயே ஆளப்பட்டார்கள் என்பது பெருமைக்குரிய விடயம்.

கதிரவேற்பிள்ளை: நீங்கள் யுத்தம் செய்யவில்லையென்பதையும் ஓர் உடன்படிக்கை செய்தீர்கள் என்பதையும் நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். நாங்கள் சுதந்திரத்துக்காக ஒரு யுத்தத்தை நடத்தி அதிலே தோல்வியடைந்தோம். அந்த யுத்தத்தில் நாங்கள் தோல்வியடைந்ததற்குக் காரணமே உங்களுக்காகவும் சேர்த்துப் போராடியதுதான்! உங்கள் அரசருக்கு உதவியாக நாங்கள் படைவீரர்களை அனுப்பி வைத்தோம். அதனல்தான் போர்த்துக்கீயர் எம்மை வெற்றி கொள்ள முடிந்தது.

நிசங்காவிஜயரத்தின! இந்த யுத்தம் எந்த ஆண்டு நடைபெற்றது?

கதிரவேற்பிள்ளை! 1619ம் ஆண்டு நடைபெற்றது. நாங்கள் உங்களுக்கு எப்படியெல்லாம் உதவினேம்? அதே சமயம் நாங்கள் போர்த்துக்கியருடன் போர் புரிகையில் நீங்கள் எங்களுக்கு எவ்வாறு கை கொடுத்து உதவ அந்த நெருக்கடி நேரத்தில் மறுத்தீர்கள்? நாம் போர்த்துக்கியருடன் போர் புரிகையில் நீங்கள் மலைகளில் எவ்வாறு ஒழித்து இருந்தீர்கள் என்பதையெல்லாம் அறிய நீங்கள் கண்டிய வரலாற்றைப் படிக்க வேண்டும்.

ஓர் உறுப்பினர்: நீங்கள், நாங்கள் என்று ஏன் பிரித்து பேசுகிறீர்கள்? நாங்கள் ஒரே தேசத்தவர் இல்லையா?

நிசங்கா: சங்கிலி மன்னனின் அமைச்சர்கள் பலர் சிங்களப் பிரதேசத்துக்கு வந்திருக்கிறுர்கள்;

கதிரவேற்பிள்ளை! கண்டி மக்கள் தங்கள் உரிமைகளை முழுவதுமாக மீண்டும் பெற வேண்டும் என்பதை நான் ஆதரிக்கிறேன்: அவர்களுக்காகப் போராட உங்களுக்கு ஒவ்வொரு உரிமையும் உண்டு. கண்டிப்பிரதேசத்தில் ஒரு தமிழர்கூட வாழக்கூடாது என்று கருதுகிறவர்களும் அங்கு இருக்கிறுர்கள் என்று நீங்கள் கூறினீர்கள்!

—6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## இந்தியா வழிகாட்டுகிறது!

ஆசியாவின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியா ஆரோக்கியமான ஜனநாயகத்தை உருவாக்கும் நோக்குடன் அருமையான சட்டமொன்றைக் கொண்டுவர முடிவுசெய்துள்ளது. தேர்தலின்போது ஒரு கட்சியில் போட்டியிட்டு வெற்றிபெற்று விட்டு, தேர்தலின் பின்னர் பிறிதோர் கட்சிக்குத் தாவும் கொள்கையற்ற குரங்குத்தனத்தை முறியடித்து, இந்திய அரசியலில் தூய்மையையும், ஒழுக்கநெறியையும் கட்டிக்காக்கும் நோக்குடன் புதிய சட்டமொன்றை கொண்டுவருவதென்று இந்தியாவின் அனைத்து அரசியற்கட்சிகளும் ஒன்று கூடி முடிவு செய்துள்ளன.

ஒரு கட்சியின் சார்பில், ஒரு கொள்கையை முன்வைத்து தேர்தலொன்றில் போட்டியிட்டு வெற்றி பெறும் ஒருவர், அப்படி வெற்றிபெற்ற பின்னுல் தாம் சார்ந்திருந்த கட்சியை விட்டுப் பிறிதோர் கட்சிக்கு தாவுவாராஞல்— அவர் பதவியை இழந்தவராகவே கருதப்படுவார்—அவரது இடத்துக்கு மறுதேர்தல்நடத்தப்படும்.

அதேபோல ஒரு கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற ஒருவர், அக்கட்சியின் கட்டுப்பாட்டுக்கும், கொள்கைக்கும் முரணுக நடந்து, அக்கட்சியினுல் வெளியேற்றப்படுவாராஞல், அவரும் பதவியை இழந்தவராகவே கருதப்பட்டு, அவரது இடத்துக்கு மறுதேர்தல் நடத்தப்படும்.

இந்திய நாட்டில் அரசியல் புனிதமடையவும், ஆரோக்கியமான ஜனநாயகம் வளரவும், மக்களுக்கு கொடுக்கப்படும் வாக்குறுதிகளுக்கு மரியாதை தரப்படவும், மேற்கண்டவாறு சட்டங்களை ஆக்குவதற்கு இந்தியாவின் அனைத்து அரசியற்கட்சிகளும் கூட்டாக முடிவு செய்துள்ளதை மனதாரப் பாராட்டி வரவேற்கிறோம்.

கட்சி அரசியல் நிலவும் ஜனநாயகநாடொன்றில் ஒரு கட்சி சார்பில்போட்டியிடும் வேட்பாளர் ஒருவருக்கு மக்கள் வாக்களிக்கிருர்கள் என்ருல், அவர்கள் அந்தக் கட்சியின் கொள்கைக்கு, இலட்சியத்துக்குத்தான் வாக்களிக்கிருர்களே தவிர—தனிப்பட்ட நபருக்கு அல்ல! அவ்வாறு ஒரு கொள்கையை மக்கள் முன்வைத்து, அக்கொள்கைக்காக பாடுபடப்போவதாக மக்களுக்கு வாக்குறுதியளித்து, தேர்தலில் வெற்றிபெறும் ஒருவர், தேர்தலில் வெற்றிபெற்ற அடுத்தநாளே கொண்ட கொள்கையையும் குறியையும், கொடுத்த வாக்குறுதியையும் காற்றில் பறக்கவிட்டு, மற்ருேர் கட்சிக்கு தாவுகிருர் என்ருல்— அவர் மக்களை ஏமாற்றுகிருர்—மக்களுக்கு துரோகமிழைக்கிருர்—என்பதே அர்த்தமாகும். இவ்வாருன நெறிகெட்ட நிலை வளருமாயின் கட்சி அரசியலும், ஆரோக்கியமான ஜனநாயகமும் வெறும் கேலிக் கூத்தாக்கப்பட்டுவிடும்; அரசியலில் அப்பட்டமான சுயநலமே தலையெடுக்கும்; புனிதமாக இருக்கவேண்டிய அரசியல், பொய்யர்களின்—எத்தர்களின்—ஏமாற்றுக்காரர்களின் புகலிடமாகி விடும்.

இவ்வாறு துரோகமிழைக்கும் ஒருவருக்கு தண்டனை வழங்குவதற்கு வாக்காளர்கள், அடுத்த ஐந்து ஆறு ஆண்டுகாலத்துக்கு அதாவது அடுத்த தேர்தல் வரை—பொறுத்திருக்க வேண்டியுள்ளது. கட்சிமாறுபவர், அப்படி மாறும்பொழுதே கட்சி மூலம் பெற்ற பாராளுமன்ற உறுப்புரிமையையும் இழந்துவிடுவதாக சட்டமியற்றுவதன் மூலம், அரசியலில் சந்தர்ப்பவாதிகள் தலையெடுக்காமல் தவிர்ப்பதற்கும், அதேசமயம் மக்களுக்கு கொடுக்கும் வாக்குறுதியை மீறி அவர்களுக்கு துரோகமிழைக்கும் சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளை மக்கள் உடனுக்குடன் தூக்கியெறிவதற்கும் வாய்ப்பு ஏற்படுத்தித்தரப்படுகிறது.

நமது நாட்டிலும் அரசியலில் இப்படியான எத்தர்கள் உண்டு; கட்சிவிட்டு கட்சி பாய்வோர் உண்டு; சந்தர்ப்பவாதிகள் உண்டு; இப்படிப்பட்டவர்களால் அரசியல் சாக்கடையாக்கப்படுகிறது. இப்படிப்பட்டவர்களின் துரோகத்தனங்களினுல், மக்கள் மத்தியில் விரக்தியும், வெறுப்பும் ஏற்பட்டு விரும்பத்தகாத விளைவுகளும் சம்பவிப்பதுண்டு.

எனவே இலங்கையிலும், ஆரோக்கியமான ஜனநாயகம் வளரவும், அரசியலில் சந்தர்ப்பவாதிகளை இல்லாதொழிக்கவும், மக்களுக்கு தரப்படும் வாக்குறுதிகள் எப்போதும் கௌரவிக்கப்படவும், கட்சிவிட்டு கட்சி மாறும் அநாகரிகமான அசிங்கமான அரசியல் அழியவும், இந்தியாவை பின்பற்றி இங்கும் சட்டம் கொண்டுவரப்படவேண்டும்.

ஒரு கட்சியின் சார்பில் ஒரு கொள்கையை முன்வைத்து தேர்தலில் போட்டியிட்டு வென்றவர்கள், கட்சிமாறிஞல் அல்லது கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டால், அக்கட்சி மூலம் அவர் பெற்ற பதவியையும் அவர் இழக்கிருர் என்று சட்டம் இயற்றப்பட வேண்டும். இப்படிப்பட்ட சட்டத்தை ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டுள்ளதாக கருதப்படும் ஜஞதிபதி ஜே. ஆர். அவர்கள் பதவிக்கு வந்த 1977 மே 21 முதல் செல்லுபடியானதாகச்செய்ய வேண்டும்.

இதுபற்றி இலங்கையிலுள்ள அனைத்து அரசியற்கட்சிகளும் சிந்திக்கட்டும்,

# நிலைமை மோசமடைந்தால் உரிய நடவடிக்கை!

## கூட்டணி நடவடிக்கைக்குழு தீர்மானம்!

தமிழ் இளைஞர்கள் காரணமின்றிக் கைது செயயப்படுவதையும், ஆதாரமின்றிக் குற்றம் சாட்டப்படுவதையும் தடுப்புக்காவலிலும், பொலிஸ் நிலையங்களிலும் தகுந்த காரணமின்றி அடைத்து வைக்கப்படுவதையும், தமிழர் வீடுகள் காரணமின்றிச் சோதனையிடப்படுவதையும், தமிழர் விடுதலைக்கூட்டணியின் நடவடிக்கைக்குழு மிகவும் வன்மையாகக் கண்டித்துள்ளது.

வவுனியாவில், திரு; தா; சிவசிதம்பரம் பா.உ. வின் இல்லத்தில் ரேச் டீ வாஸ் தலைமையில் 28-5-78ல் நடைபெற்ற கூட்டணியின் நடவடிக்கைக்குழுக்கூட்டத்தில் இது சமபந்தமாக எடுக்கப்பட்ட தீர்மானம் வருமாறு:—

தெளிவான குற்றச்சாட்டுக்கள் இல்லாமல் இளைஞர்களை கைதுசெய்வதையும்—

சட்டத்திற்கு அமையாத முறையில் பல இளைஞர்களை கைதுசெய்து காவலில் வைப்பதையும்—

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் தாக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுவதையும்—

காரணமின்றி சட்டத்துக்கு அமைந்துவாழும் ஆயிரக்கணக்கான மக்களின் வீடுகளை காவல் படையினர் தேடுதல் செய்தல் என்ற போர்வையில் துன்புறுத்துவதையும்—

வாகனங்களை மறித்து பெண்கள்பிள்ளைகளை இறக்கி அவர்களை அவமதிப்பதையும்—

தேவையரனவர்களைத் தேடும்போர்வையில் கடந்த இனக்கலவரத்தின் போது பாதிக்கப்பட்டு அகதிகளாக வந்து வயல்களிலும் பண்ணைகளிலும் குடியேறியோரை துன்புறுத்துவதையும்—

இக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணி வன்மையாக ஆட்சேபிப்பதுடன், நிலைமை மோசமடைந்தால் உரிய நடவடிக்கையெடுக்க பாராளுமன்றக் குழுவுக்கு அங்கீகாரமும் வழங்குகிறது.

கூட்டணியின் இரண்டாவது தேசிய மாநாட்டை முன்பு திட்டமிட்டது போலவே கோப்பாய்த் தொகுதியில் யூலை 29, 30ம் திகதிகளில் நடத்துவதென்றும் புதிய அமைப்புத்திட்டத்தின் கீழ் முதலாவது பொதுச்சபைக் கூட்டத்தை மட்டக்களப்பில் யூன் 25ம் திகதி நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

# ஐம்பத்தைந்தாவது அகவையில் கலைஞர் காலடி வைக்கிருர்

## அவர் பல்லாண்டு வாழ்கவென நெஞ்சார வாழ்த்துவோம்!

1978 ஜூன் 3ந் திகதி உலகத் தமிழ் மக்களின் உன்னதத் தலைவன்—நம்பிக்கைப் பேரொளி, நந்தா விளக்கு கலைஞர் கருணுநிதியின் 55வது பிறந்த தினமாகும். அவர் பிறந்த நாளை நினைவு கூர்ந்து அவரது அரும் பெரும் சாதனைகளை தமிழர் ஒவ்வொருவரும் எண்ணி மகிழ்வோமாக.

"கலைஞர், முதல்வர், டாக்டர், கழகக்காவலர், கலைஞர் திலகம், காவியத் தலைவர், மனுநீதிச்சோழன், அறிவில் பெருந்தகை. செந்தமிழ்ச் செல்வர், இளைய அண்ணன். உலகமாக் கவிஞர், மக்கள் காவலர், பல்கலை வித்தகர், கல்லக்குடி கொண்டான். இலக்கிய வேந்தர், பகுத்தறிவுச் சிங்கம், சிந்தனைச் செல்வர், அஞ்சா நெஞ்சன், ஆற்றல் வீரர், நுண்கலைத் திறஞளர். கோடியில் ஒருவர், இரண்டாம் இளங்கோ, தானைத்தளபதி, அரியணைச் செல்வர், சொல்லேருழவர், கருணைநிதி, புதுயுகத்தின் முதல்வர்,நாலரைக் கோடித் தமிழரின் தன்னிகரில்லாத் தலைவன்" இப்படிப் பல பட்டங்களுக்குரிய பண்பாளர் மு.கருணுநிதி அவர்கள் 55வது பிறந்த நாளை யூன் 3ல் கொண்டாடுகிருர்.

கலைஞர் இன்று ஒரு அரசியல் கட்சியின் தலைவர் மாத்திரமல்ல தமிழ் மண் காத்திட தமிழ் அரியணை ஏறிட தமிழ் மணம் உலகெலாம் மணத்திட நல் விருந்தளிக்கும் நல்வேந்தருமாவார்.

"தி. மு.கழகம் ஒரு குடும்பமாக விளங்குகின்றது. அந்தக் குடும்பத்தின் பொறுப்புள்ள தலைவஞகக் கலைஞர் விளங்குகின்ருர்" என்று அன்ருெருநாள் பேரறிஞர் அண்ணு விளக்கிக்கூறிஞர், அதேபோல உலகின் ஏழைரைக்கோடிதமிழ்மாந்தரைக் கொண்ட தமிழ் குடும்பத்தின் தளநாயகராம் கலைஞர் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகிருேம்—

## சிவகுமாரன் நினைவுக்கூட்டம்

தியாகி சிவகுமாரனின் 4வது ஆண்டு நினைவுதினக் கூட்டம், உரும்பராயிலுள்ள சிவகுமாரன் சிலை முன்றலில் 5-6-78 திங்கட்கிழமை பிற்பகல் 5 மணிக்கு த. வி, கூ. உரும்பராய்க் கிளைத்தலைவர் திரு. பா. ஜெயராஜன் தலைமையில் நடைபெறும். கூட்டத்தில் பின்வருவோர் பேசுவார்கள் என விளம்பரப் படுத்தப்பட்டுள்ளது. திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம் பா.உ, சி. கதிரவேற்பிள்ளை பா. உ. மு. சிவசிதம்பரம் பா. உ, கவிஞர்காசி ஆனந்தன், திரு. வெ. யோகேஸ்வரன் பா. உ, பி. சோ. சூசைதாசன் பா. உ, வண்ணை ஆனந்தன், திருமதி அமிர்தலிங்கம், த. இராசலிங்கம் பா. உ, மாவை சேஞதிராசா, வ. பொன்னம்பலம் .ஈழவேந்தன், வ. ந. நவரத்தினம். பா.உ.

அன்று பிற்பகல் 4மணிக்கு உரும்பராய் வேம்பன் மயானத்தில் அமைந்திருக்கும் தியாகி சிவகுமாரனின் சமாதியில் அஞ்சலி நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

## ஈழத்து தமிழ் நாவல் இலக்கியம் நூல் வெளியீடு!

திரு. நா. சுப்பிரமணியம் எம். ஏ. எழுதிய "ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம்" என்ற நூல் வெளியீடு 4-6-78 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு யாழ்ப்பாண வளாக இராமநாதன் மண்டபத்தில் பேராசிரியர் சு.வித்தியானந்தன் தலைமையில் நடைபெறுகிறது. திரு. துரை மஞேகரன் சி. தில்லைநாதன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர். திரு. மயிலங்கூலூர் நடராசன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

# ஜே. ஆரின் தர்மிஷ்ட ஆட்சியிலும் பழைய கதையே தொடர்கிறது!

சாதி மதபேதம் இல்லாது சகலருக்கும் சமத்துவமான உரிமைகள் வழங்கப் போவதாகப் பீற்றித் திரிந்த புதிய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அண்மையில் பொலீஸ் மா அதிபர் பதவி காலியாக வந்த போது பௌத்த சிங்களவரான திரு அஞ செனிவிரத்திஞவையே அப்பதவிக்குநியமித்துள்ளதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன:

திரு. அஞ செனிவிரத்திஞ சேவை மூப்பில் முதல் இடம் வகிப்பவராக இருந்தால் அவரது பதவி உயர்வை [illegible] [illegible] அவரோ திரு. ருத்திரா ராஜசிங்கம், திரு. ஜோசேப் ஆகிய இரு தமிழர்களுக்கும் சேவை மூப்பில் இளையவராகவே இருக்கிருர். திரு. ருத்திரா ராஜசிங்கமும் திரு. ஜோசேப்பும் தமிழர் என்பதால் அவர்களைப் பக்கவாட்டால் கடந்து பௌத்த சிங்களவரான திரு. அஞ செனிவிரத்திஞவுக்கு இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவி தரப்பட்டிருப்பது யாவருக்கும் சமத்துவ உரிமைகள் என்ற ஐக்கிய தேசியக் கட்சியின் கோஷத்தில் சுருதி பேதத்தையே காட்டுகிறது.

முன்பு நீதியரசர் நாகலிங்கம் தமிழர் என்பதால் அவருக்குச் சேரவேண்டிய பிரதம நீதியரசர் பதவி பசநாயக்காவைச் சென்றடைந்தது. அது பழைய கதை. தற்போதைய ஐக்கிய தேசியக்கட்சி ஜே. ஆர், ஜெயவர்தஞவின் புதிய தலைமையில் இன, மத பேதத்துக்கு இடமில்லை யென்று வாதிடப்பட்டது. ஆயினும் இந்த ஆட்சி பதவிக்கு வந்ததும் நடைபெற்ற சுகாதார சேவைகள் அதிபர் பதவி நியமனத்தில் தமிழரான டாக்டர் யேசுதாசன் புறக்கணிக்கப்பட்டார். சேவையில் இளையவரான பிறிதொருவர் அப்பதவியைத் தட்டிக் கொண்டார்.

அன்று நீதியரசர் சி. நாகலிங்கம் அவர்களுக்கு நடந்த அதே கதைதான் நேற்று டாக்டர் யேசுதாசனுக்கும் இன்று ருத்திரா ராஜசிங்கத்துக்கும் தொடருகிறது.

—திரவியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தேடுதல் என்ற போர்வையில் பெண்களுக்கு ராணுவம் தொல்லை"

## அரசாங்க சார்பு ஏடே எழுதுகிறது!

வடபகுதியில் வீட்டுக்கு வீடு தேடுதல்நடத்தும் இராணுவத்தினர் பெண்களை தொல்லைப் படுத்துவதாகவும், மக்களின் உடமைகள் பாதுகாப்பற்ற நிலையிலிருப்பதாகவும், புகார் கூறப்படுவதாக அரசாங்க சார்பு பத்திரிகையான 'இன்டிப்பெண்டன்ற்" ஏடே எழுதியுள்ளது.

25-5-78 'இன்டிப்பெண்டன்ற்' எழுதியுள்ளதாவது:-

Meanwhile, residents of the North are up in arms at the Manner searches are carried out in private houses, perticularly by the army.

They state that not only are woman being molested, but their belongings are also unsafe.

"To whom are we to complain" wailed a resident, "Police Stations are the last places we can go".

"இதேவேளை, வடபகுதியில் தேடுதல் நடைபெறும் விதம்பற்றி — குறிப்பாக இராணுவத்தினரின் தேடுதல் முறைக்கு எதிராக— அப்பகுதிமக்கள் ஆத்திரமடைந்துள்ளனர்.

"பெண்களுக்கு தொல்லை தரப்படுவதுமட்டுமன்றி, தங்கள் ஏனைய உடமைகளுக்கும் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் கூறுகிறார்கள்.

"இதுபற்றி நாம் எங்கே புகார் செய்யமுடியும்? நாம் இறுதியாகப் போகக் கூடிய இடம் பொலீஸ் நிலையங்களே!" என்று ஒரு பிரஜை தெரிவித்தார்.

இவ்வாறு 'இன்டிப்பெண்டன்ற்' செய்தி வெளியிட்டுள்ளது.

---

### சுதந்திரனுக்கு 32வயது

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக்குரலான சுதந்திரனுக்கு 1-6-1978 முதல் 32 வயது தொடங்குகிறது. 1947 யூன் மாதம் முதலாம் திகதி சுதந்திரன் ஆரம்பிக்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. கடந்த 31 ஆண்டு காலமாக தமிழ் சமுதாயத்தின் காவல் நாயாக— உரிமைப்பாதுகாவலனாக —விடுதலைக் குரலாக விளங்கி வரும் சுதந்திரன்— தனது பணியைத் தொடர்ந்து செய்ய வாசகர்கள், விற்பனையாளர்கள், விளம்பரதாரர்களின் ஒத்துழைப்பை நாடிநிற்கிறது.

---

● —6-ம் பக்கத் தொடர்

அந்த இக்கட்டான நிலையிலும் முத்து வாய்விட்டுச் சிரித்தான். "சிவம்... அஹிம்சை அஹிம்சை என்கிறதாலை நாங்க பயந்தவர்கள் என்று நினைக்காதை.. நாங்கள் தான் உண்மையிலேயே துணிச்சல்காரர்கள்."

கூடவே அழைத்துக் கொண்டு ஓடினான் சிவம். இருளும் துணைசெய்தது. வயல் வரம்புகள் மணற்திட்டுகள், கல்லிலும் முள்ளிலும் கால்கள் இடற அந்த இருளில் தமிழர் வாழ்வுக்கு ஒளி தேடி நடந்தார்கள். பனங்கூடல் நடுவில் பாழுங்கிணறு. கிணற்றுக்கட்டில் பெருமூச்சுடன் அமர்ந்து கொண்டான் சிவம். அருகிலேயே அமர்ந்துகொண்ட முத்து தயங்கியபடியே கூறினான்;

"சிவம் உன்ர சக்தி விடுதலைக்கு துளிகூட உதவாமல் வீணாகுவதுபோல் தான் எனக்குப் படுகிறது."

"முத்து..." சிவத்தின் கோபம் வார்த்தையில் பிரதிபலித்தது.

"சிதறிய சக்திகளாலை வெற்றிகாணமுடியாது சிவம் நம்ம விடுதலை இயக்கத்தலைவரை... அந்த சத்தியத்தின் திரு உருவை நீ சந்திக்க வேணும்... அவர் காலடிச் சுவட்டில் நீ பயணத்தைத் தொடரவேணும்."

நண்பனின் வேண்டுகோளைத் தவிர்க்க அவனால் முடியவில்லை.

முற்றவெளி மைதானம் சனக்கூட்டத்தால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. மேடையின் நடுவில் இருந்த கதிரையில்... தமிழர் தந்தை அமர்ந்திருந்தார். மூப்பின் எல்லையில் உடல் தளர்ந்த அந்த நிலையிலும்... தலைவருக்கு தெளிவாகப் பேசும் சக்தி அற்றுப்போய் இருந்தது. இருந்தும் சீறி அடித்து வரும் குளிர்காற்றில்... அந்தப் பனி இரவில் எப்படித் தான் சிரித்த முகத்துடன் இருக்கமுடிகிறது. அவரது ஆத்மாவுக்கு அத்தனை பலமா?

சிவத்தின் மனதில் கேள்விகள் எழுந்துகொண்டேஇருந்தன. அருகில் சென்றுதன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். அவர் முகத்தில் அதே புன்னகை தவழ்ந்தது. தலைவரின் பார்வையில் ஏதோ ஒரு 'சக்தி' கூடிச்செல்கிறதே... "தலைவா உன்மீது ஆணை என் தமிழின் வாழ்வுக்காக உழைப்பேன்" சிவத்தின் உள்ளம் உறுதி பூண்டது.

புதிய உற்சாகம் சிவத்தை ஆட்கொண்டது. பழைய பயணம் புதிய பாதை. சந்தியில் நின்ற சிவத்தை சிந்தனை வலைகள் பிணைத்திருந்தன; "சர்..." என்று வந்து நின்ற ஜீப் வண்டியினை அவன் எதிர்பார்க்கவில்லை. பாய்ந்து இறங்கியவர்கள் அவனை வளைத்துப்பிடித்தபோது... சட்டென்று தான் தயாராகவே வைத்திருந்த உயிர் போக்கும் மாமருந்தை விழுங்கிவிட்டான். "நான் அநீதியிடம் அடிவாங்கத் தயாராக இல்லை" என்பது போல் அவன் உயிர் காற்றில் மிதந்தது.

அநீதிக்குத் தலை வணங்க மறுத்த வீரபாண்டிய கட்டப்பொம்மன் கூட தூக்குக் கயிற்றைத் தலைகுனிந்து தான் ஏற்றான். ஆனால் சிவமோ தலைநிமிர்ந்து மரணத்தை ஏற்றான்;

கட்டபொம்மன் கூட சிவத்தின் வீரத்தின்முன் தலை குனிந்தான்.

(யாவும் கற்பனையல்ல)

---

# "தமிழைதேசிய மொழியாக்குவதால் மட்டும் தமிழர் திருப்தியடையார் அவர்கள் வேண்டுவது சுயாட்சியே"

## —'இன்டிப்பெண்டன்ற்' இடித்துரை!

"எப்படியிருந்த போதிலும், தமிழை ஒரு தேசிய மொழியாக்கி விடுவதால் மட்டும் தமிழர் விடுதலைக் கூட்டணியோ, தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வெளியேயிருக்கும் தமிழர்களோ திருப்தியடைந்துவிடப் போவதில்லை...

"தமிழர்களின் நியாயமான கோரிக்கை என்னவென்றால், வடக்கு கிழக்கிலுள்ள, தமிழர் மரபு வழிப் பிரதேசங்களில் தமக்கு கூடுதலான சுயாட்சி வேண்டும் என்பதுதான்... இதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணி ஜனநாயக ரீதியில் வாதாட முடியும்.

"இவற்றையெல்லாம் விட தமிழர்கள் எதிர்பார்ப்பது என்னவென்றால், சமத்துவ உரிமை வழங்கப்படவேண்டுமென்பதில் சிங்களவர்களுக்கு எவ்வளவு தூரம் அந்தரங்க சுத்தியுண்டு என்பது தான் அரசாங்க ஆவணங்கள் இப்போது சிங்களத்தில்; அரசாங்க சேவையில் பாகுபாடு; இப்படியான நடவடிக்கைகளினால் தமிழர்களுக்கு தாழ்வு முத்திரை குத்தப்படுகிறது. இவை நிறுத்தப்பட வேண்டும்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இடம் பெறும் காக்கிச் சட்டைகளின் காடைத்தனமும் வெறியாட்டமும், ஜனாதிபதி விரும்பும்ஒற்றுமைக்கு ஊறு விளைப்பனவாகும்...'

—"இன்டிப்பெண்டன்ற்" (ஆசிரியத் தலையங்கம்— 25-5-78)

---


## விற்பனைக்கு

குறுகிய காலத்தில் கூடுதல் பயன் தரக்கூடிய நல்ல இன செவ்விழ நீர்க்கன்றுகள் விற்பனைக்குண்டு,

மில்க்வைற் யாழ்ப்பாணம்


---

● —1-ம் பக்கத் தொடர்

மொழியாக இருக்கும்; அதே சமயம் நாடுமுழுவதும் சிங்களம் மட்டுமேஆட்சிமொழியாக இருக்கும். இதுவே உத்தேச திருத்தத்தில் காணப்படும் 'மொழியுரிமை' ஆகும்.

### போதனுமொழி

சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு 'தேசிய' மொழிகளில் ஒன்றை மாணவர்கள் தமது போதனுமொழியாக ஏற்றுக்கொள்ளலாம் என்று திருத்தம் கொண்டுவரப்படுகிறது. அதாவது ஒரு தமிழ் பிள்ளை விரும்பினால், சிங்களத்தையும் தனதுபோதனுமொழியாக தெரிவுசெய்வதற்கு இத்திருத்தம் இடமளிக்கிறது. சட்டரீதியாக ஒரு பிள்ளையின் தாய் மொழியே அதன் கட்டாய போதனுமொழியாக இருக்க வேண்டும் என்ற தமிழர்களின் கோரிக்கைக்கு இது முரணானதாகும்.

### சிங்களக் குடியேற்றம்

சிங்கள மக்களை திட்டமிட்டு தமிழ்மக்களின் மரபு வழித் தாயகத்தில் குடியேற்றி, தமிழ் பேசும் மக்களின் தாயகத்தை சூறையாடும் ஏகாதிபத்திய கொள்கைக்கு முற்றுப்புள்ளிவைக்கும் திருத்தம் எதுவும் அரசியலமைப்புக்கு கொண்டு வரப்படவில்லை. குடியேற்றப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று ஐ.தே. கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டிருந்த போதிலும், அதுபற்றி எந்தத் தீர்வும் முன்வைக்கப் படவில்லை.

### சுயநிர்ணய உரிமை

தமிழ் தேசிய இனத்தின் ஒன்றுபட்ட கோரிக்கையாகிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கவோ, அல்லது அதற்கு குறைந்த அளவில் தானும் தமிழ் பிரதேசங்களுக்கு சுயாட்சி வழங்கவோ, கூடிய எந்தத் திருத்தமும் முன்வைக்கப்படவில்லை!

சோசலிச நாடுகளிலுள்ளது போன்று தேசிய இனங்களுக்கு தாமும் சுயநிர்ணய உரிமையை வழங்கப் போவதாக தேசிய அரசுப்பேரவையில், ஜனதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன பிரதமராக நின்று அளித்த உ[illegible] கௌரவிக்கப்பட[illegible] தேச அரசியலமைப்புத் திருத்தங்கள் எவ்விதத்திலும் தமிழ்மக்களின் அபிலாஷைகளை ஈடுசெய்வதாக அமையவில்லை.

ஜே. ஆர். அவர்கள் தமிழ் மக்களுக்கு அளித்திருந்த "சுயநிர்ணய உரிமை" பற்றிய உறுதிமொழி காற்றில் பறக்கவிடப்பட்டுள்ள அதே சமயம், அவர் 6-12-77ல் தேசிய அரசுப் பேரவையில் தெரிவித்திருந்த இரண்டு கருத்துக்களுக்கு அமையவே அரசியலமைப்புத் திருத்தங்கள் இடம் பெற்றிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(1) சிங்களம்மட்டும் சட்டத்தில் மாற்றம் எதுவும் நிகழாது.

(2) தமிழ் மக்களின் மரபு வழித்தாயகம் என்று ஒன்று இருப்பதாக கூட்டணியினர் கூறும் கொள்கையை நான் ஏற்கமாட்டேன்.

மேற்கண்ட இரண்டு கருத்துக்களையும் பிரதமர் ஜே. ஆர். முன் வைத்திருந்தார். அந்த இரண்டு கருத்துக்களும் தமிழர்களின் அடிப்படை உரிமைகளை மறுதலிப்பவை. அவற்றின் அடிப்படை பிசகாமலே உத்தேச திருத்தங்கள் [illegible] [illegible] தெரிகிறது.

---


### பாவியுங்கள்




ரோயல் நீலத்தினைத் தயாரித்து விற்பனை செய்யும் சிவா இன்டஸ்ரீஸாரின் மற்று ஒரோர் தயாரிப்பு

ரோயல் ஜெலி கிறிஸ்டல்

மற்றும் ஏனைய தயாரிப்புகள்

ரோயல் பேக்கிங்பவுடர்
ரோயல் கஸ்டட் பவுடர்
ரோயல் கோண் பிளவர்
ரோயல் பிஸ் மக்ஸ்
ரோயல் நீலம்

தயாரித்து விற்பனை செய்வோர்

சிவா இண்டஸ்றீஸ்

112 1/3 4ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தியாகி சிவகுமாரன் நினைவுச் சிறுகதை;

# தியாக தீபம்

### காவலூரான்

உலைக்களம்போல் அந்த உள்ளங்கள் கொதித்துக் கொண்டிருந்தன. வேதனையின் பிரதிபலிப்பு அந்த முகங்களில் பதிந்திருந்தது, "அடுத்தது என்ன" என்ற கேள்வியே எல்லோர் மனங்களிலும் எதிரொலித்துக் கொண்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் பிரபலமான அந்தக் கல்லூரியின் மைதானத்தில் திரண்டிருந்த அத்தனை இளைஞர்களின் நெஞ்சிலும் ஏக்கம் ஏமாற்றம்... சத்தியத்தின் ஆவேசம் தீப்பிழம்புகளாகத்தான் அவர்கள் நின்றார்கள். அநீதியை எரித்துவிட அத்தனை ஆர்வம்...

சுவர்மீது நின்றுகொண்டிருந்த. சிவத்தின் குரல்காற்றில் கலந்து சூழநின்ற நெஞ்சங்களில் பேராடிக் கொண்டிருந்தது. "வாழப்பிறந்தோம் வழிகண்டு ஆளப் பிறந்தோம், தாய்மொழிக்கு இழி நிலை, நம் தமிழர் வாழ்வுக்கு வழியில்லை. சிறுபான்மை நம்மைச் சிறுபான்மைப் படுத்துமா?" நெஞ்சங்கள் எரிந்து கொண்டிருந்தன. "தரப்படுத்தல் தமிழர்தம் உயர்வைத் தடைப்படுத்தல் பொங்கியெழுவோம் தடையுடைத்துத் தமிழை வாழ வைப்போம்." என்று சிவம் உணர்ச்சி பொங்கக் கூறிய போது சுற்றிநின்றவர்களிடம் உணர்ச்சிப்பிரவாகம் கரைபுரண்டது.

மடை திறந்த வெள்ளம் போல் தடையுடைத்து நகர்ந்தது தமிழர் படை பிரதான வீதியினூடாக வந்துகொண்டிருந்த அந்தச் சத்திய ஆற்றின் முன்னணியில் "வாழு வாழவிடு" என்ற 'பானரை'த் தாங்கியபடி வந்து கொண்டிருந்தார்கள் சிவமும் முத்துவும். முத்து சிவத்தின் உயிர் நண்பன்.

காலங்கள் மறையலாம் கன்னித் தமிழ் வீரம் மறையுமா? பள்ளிக்கூடங்களிலே படிப்புடன் போராடிக் கொண்டிருந்தவர்கள் இன்று அநீதியுடன் போராட ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் புறப்பட்டு விட்டார்கள். ஜீப் வண்டிகள் உறுமிக்கொண்டு முன்னால் வந்து நின்றன. "அனுமதி பெறாத ஊர்வலத்தை நகரவிடமாட்டோம் கலைந்து செல்லுங்கள்" அதிகாரம் ஆணையிட்டது. அடங்கிவிட அவர்களென்ன மந்தைக்கூட்டமா! "எங்கள் மண்ணிலேயே எங்களுக்கு ஊர்வலம் போகவும் உரிமையில்லையா?" துடித்தெழுந்து கேட்டான் சிவம். எதிரே நின்ற 'மிருகத்தி'ன் கையில் இருந்த குண்டாந்தடி சுழன்றது.

மண்டையில் இருந்துஇரத்தம் சீறிப்பாயநிமிர்ந்து நின்றான் முத்து சிவத்தின் மீது விழவிருந்த அடியைத் தான் ஏற்றுக்கொண்டான். உயிரான நட்பு அவனுடையது. முத்துவின் சிவந்த இரத்தம் கண்டு சிவத்தின் கண்கள் சிவந்தன. அந்த இரத்தத்தின் மீதே ஆணையிட்டுக் கொண்டான். அடக்குமுறைக்கு அஞ்சாமல் அதிலேயே அமர்ந்து விட்டார்கள் தமிழ்க் கண்ணின் இமைகள்.

முத்துவின் தலையில் ஏற்பட்ட காயத்தை காலம் ஆற்றியது. ஆனால் அந்த நினைவு ஆறக்கூடியதா நினைக்கும் தோறும் உள்ளத்தைக் கொதிக்க வைக்கும் நினைவல்லவா? "முத்து ஆடுகளும் ஓநாய்களும் ஒரே மந்தையில் இருக்க முடியாது" என்றான் சிவம்.

"உண்மைதான் சிவா. நம் தமிழர் தனி வாழ்வுதான் இருள் போக்கும் ஒரேவழி. சத்தியத்தின் வழியில் அண்ணல் மகாத்மாவின் அடிச்சுவட்டில் நம்ம தலைவர். சுதந்திரம் நமக்குக் கிடைக்காமலா போய்விடும்".

"பேசிக்கொண்டே இருக்கிறோம், ஒவ்வொரு நிமிடமும் அடிமைகளாக இருக்கப்படுகிறது... செயல் செயல் அதுதான் தேவை" சிவம் கூறியது கேட்டு முத்துவுக்குப் புல்லரித்தது. பேச்சை வேறு திசைக்கு மாற்றினான். "கண்ணியமிக்க நம்ம தமிழ்மொழியை ஆராய்வதற்காக விழா எடுக்கிறார்கள். வெளிநாட்டிலிருந்து அறிஞர்களெல்லாம் ஆராய்ச்சிக்காக இங்கே வருகிறார்கள்"

"மாநாட்டின் வெற்றிக்காக உழைக்கிறதுதான் இப்ப நமக்குள்ள முதல் கடமை" என்று ஆர்வத்துடன் கூறினன் சிவம்.

தமிழர் தலைநகர் விழாக் கோலம் பூண்டது. தெருவெல்லாம் மகரதோரணங்கள். அலங்கார வளைவுகள் கன்னித்தமிழை ஆராய்வதற்காக மாநாடு கூடியது. மணவிழாக்காணப் புறப்பட்டவர்கள் போன்று... அல்ல மணமக்கள் போன்றே அலங்கரித்துக்கொண்டு மக்கள் திரண்டு விட்டார்கள். உற்சாகமாக மாநாட்டின் வெற்றிக்காக உழைத்துக் கொண்டிருந்தான் சிவம்.

அடிமைகளுக்கு விழாவா? அழியவேண்டிய மொழிக்கு ஆராய்ச்சியா? அக்கிரமக்காரர்களின் மனதில் கேள்விக் குறி. துரோகிகள் தூபமிட்டனர். விளைவு?

விழாமேடை பிணமேடையானது. வெறும் கையுடன் இன்பத்தை மட்டுமே மனதில் சுமந்திருந்த மக்கள்கூட்டத்தில் மந்தைகள் புகுந்தன. உரிந்த சேலைகள், உதிர்ந்த மானங்கள், சிதறிப் பதறி ஓடியது மக்கள் கூட்டம் கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வெடித்தன. கூடவே துப்பாக்கியின் வேட்டுக்கள் பிணமாகச் சரிந்தவர் கன்னித் தமிழ்க் காளைகள். வெறிகொண்டு எழுந்தான் சிவம். வெறியனின் கையில் இருந்த துப்பாக்கியைத் தாவிப் பறித்தான், "படார்" மற்றைய வெறியனின் துப்பாக்கிப்பிடி சிவத்தின் முதுகில் மோதியது. கூட்டம் சிதறிக்கும்பிய போது வெறியர்களின் பார்வையில் இருந்து சிவத்தின் உடல் மறைந்து கொண்டது. அவன் தப்பிவிட்டான் அல்ல... அவர்கள் தப்பிவிட்டார்கள்.

பச்சைவிரிந்து கிடந்த வயற்பரப்பில் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான் சிவம். உணர்ச்சியே வடிவாகி அருகில் அமர்ந்திருந்தான் முத்து. எங்கிருந்தோபறந்து வந்த கிளிக்கூட்டமொன்று வயல்வெளியில் இறங்கி உரிமையற்ற உறவுகொண்டாடிக் கொண்டிருந்தது. இப்படித்தானே அவர்களும் எமது மண்ணை ஆக்கிரமிக்கிறார்கள். கிளிகளைக் காட்டி விவரித்தான் முத்து...சிவம் சொன்னான்.

"அன்றைக்கு என் தமிழர் மீது விழுந்த அடிகள் வலித்துக்கொண்டே இருக்கின்றன. பழிக்குப்பழி வாங்காமல் விடவே மாட்டேன்."

"சிவம் பழிக்குப் பழி என்பது மிருகத்தனம் அகிம்சையின் வழியில் தான் நிரந்தரமான வெற்றியைக் காண முடியும்;

முத்து கூறியதைக்கேட்டு கேலியான சிரிப்பொன்றை உதிர்த்தான். "சத்தியம் மனிதர்களிடம் தான் பலிக்கும்..." என்றபடியே எழுந்து நடந்தான்.

சிவத்தின் அண்மைக்கால நடவடிக்கைகளை முத்து அறிவான். பலாத்காரத்தில் நம்பிக்கை கொண்டு அவன் இயங்குவதை எண்ணி மனம் கலங்கினன். "சிவம்......" உருக்கமாக அழைத்தபடியே பின்னால் போனன் முத்து.

"செத்தாலும் விடான்" என்றபடியே திரும்பிப் பாராது முன்னால் நடந்தான் சிவம்.

மெல்லிய இருள் பரவிக் கிடந்தது. வீட்டின் மேற்குப் புறமாக இருந்த வயல் வெளியில் தான் சந்திப்பதாக சிவம் கூறியிருந்தான், முத்து அவன் வரவுக்காகக் காத்திருந்தான் சில மணித்துளிகள் கரைந்திருக்கும் ஓடி வரும் காலடி ஓசை சிவம் ஏன் ஓடிவருகிறான்.

"முத்து பொலிஸ் என்னைத் தேடுகிறது; நீ போய் விடு நான் ஒளிந்து கொள்கிறேன்;"

—5-ம் பக்கம் பார்க்க

---

—3-ம் பக்கத் தொடர்

நிசங்கா விஜயரத்தின: குடியுரிமை பெற்றிருக்கும் தமிழர்களை நாங்கள் வரவேற்கிறோம். நாங்கள் தொண்டமானை அணைத்து வைத்திருக்கிறோம். உங்கள் எல்லோரையும் நாங்கள் அணைப்போம்.

கதிரவேற்பிள்ளை: "மற்றவர்களின் நம்பிக்கை" பற்றி நீங்கள் கூறியது பற்றியே நான் இங்கு குறிப்பிட்டேன். தமிழர்கள் சிங்களப் பிரதேசங்களில் வாழுவதை ஏற்றுக் கொள்ளாதவர்கள் இருந்தால் அவர்களது கருத்தை நீங்கள் வெளிப்படையாக முன்வைக்கலாம் நல்லது. அது வேறு விடயம்.

நாங்கள் எங்கள் சுதந்திரத்தை, எங்கள் தாயகத்தை எங்கள் இறைமையை, யுத்த முனையில் போர்த்துக்கீயரிடம் பறிகொடுத்தோம். உங்கள் சம்மதத்துடன் அவற்றை மீளப்பெற வேண்டுமென்றுநாம் விரும்புகிறோம்.

ஓர் உறுப்பினர்: பிரச்சினை யென்னவென்றால், நீங்கள் இருபக்கத்திலும் நிலம் கேட்கிறீர்கள்!

கதிரவேற்பிள்ளை! இல்லை, சிங்கள நாட்டில் நீங்கள் தமிழர்களை வேண்டாமென்று கூறினல். தமிழ் ஈழத்தில் ஒவ்வொரு தமிழரையும் வைத்திருக்க நாம் தயாராக இருக்கிறோம்—

நிசங்கா! நாம் அதுபற்றி தொண்டமானுடன் விவாதிப்போம்!

கதிரவேற்பிள்ளை! இதில் விவாதத்துக்கு இடமில்லை. அவர்களை உங்களுக்கு தேவையில்லையென்றால், அவர்களை நாம் ஏற்கத்தயாராக இருக்கிறோம். இதிலே பிரச்சினை இடையாது. திரு. தொண்டமானுடன் கலந்து ஆலோசிக்காமலே இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்தீர்கள். உங்கள் பிரதேசங்களில் தமிழர்கள் இருக்கக்கூடாதென்று நீங்கள் கருதுவீர்களானால், அவர்களை எம்மிடம் அனுப்புங்கள்; அவர்களைநாம் பராமரிப்போம். எனவே அடிப்படையான பிரச்சினை என்னவென்றால், பிரிட்டிஷார் செயற்கையாக உருவாக்கிய ஒரேநாட்டுக்குள் இருதேசிய இனங்கள் ஒன்றாக வாழ முயற்சிப்பதால் ஏற்பட்டுள்ள அரசியல் பிரச்சினைதான். அதுவே அடிப்படை பிரச்சினையாகும். அந்தப் பிரச்சினையை எதிர்கொள்ள உங்களால் முடியவில்லை. அந்தப் பிரச்சினையை நீதியாகவும், புத்திசாதுரியத்துடனும் நீங்கள் அணுக வேண்டும். நீங்கள் சுதந்திரம் பற்றி பேசுகிறீர்கள். இந்தப்பிரச்சினை எப்படிஎழுந்ததென்று சிந்தித்துப்பாருங்கள். பிரிட்டிஷார் தந்து விட்டுப்போன ஒரே அரசின் கீழ் இருதேசியஇனங்கள்ஏன் வாழ முடியவில்லை என்பதை எண்ணிப்பாருங்கள். அந்த ஒரேயொரு பிரச்சினையே இன்று நம்மை எதிர்நோக்குகிறதே தவிர, வேறு எந்தப் பிரச்சினையும் அல்ல. அந்தப் பிரச்சினையைஎதிர்கொண்டு, அதை விளங்கிக் கொள்வீர்களானல், பின்னர் ஒருபோதும் "தேசிய ஒற்றுமை" என்ற சொல்லைப் பயன்படுத்த மாட்டீர்கள். (இடையீடுகள்)

ஆம், நாம் சிங்களவர்களின் நட்பை நாடுகிறோம். அவர்களின் ஒத்துழைப்பை நாடுகிறோம். நாங்கள் உங்களின் நட்புமிக்க அயலவர்களாக வாழ விரும்புகிறோம். பொதுவான விடயங்களில், இருவருக்கும் பொதுவான பாதுகாப்பு, பொதுவான வெளிநாட்டு விவகாரங்கள், பிராந்தியத்துக்குரிய பொதுவான விடயங்கள், ஆகியவற்றில் உங்களுடன் ஒன்றுபட்டு வேலை செய்ய விரும்புகிறோம். எங்கள் நாடுமட்டுமல்ல, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், பர்மா, ஆகிய நாடுகள் அனைத்தும் சேர்ந்து ஒரே பிராந்திய அணியாக இயங்க முடியும்.

சிங்களவர்கள் எப்படி சுதந்திரமாக வாழுகிறார்களோ— அவர்களைப்போல நாமும் சுதந்திரமாக வாழுவதற்கு சிங்கள மக்களின் இணக்கத்தை பெறவிரும்புகிறோம். நாங்கள் ஒரு சுதந்திர தேசிய இனமாக வாழுவதற்கு சிங்களவர்களின் நட்பையும் சம்மதத்தையும் நாடிநிற்கிறோம். அதுதான் நாம் வேண்டிநிற்பது. அதை வன்முறை மூலமன்றி— நேரடிமோதுதலின்றி பேச்சுவார்த்தை மூலமும், கருத்துரையாடல் மூலமும் நிலைநாட்டிக்கொள்ள விரும்புகிறோம். அதுவே சுதந்திரம் பெறுவதற்கு காந்தியடிகள் எமக்கு சொல்லித் தந்த வழியாகும். அந்த வழியிலேயே நாம் செல்கிறோம். இதுதான் பிரச்சினையென்பதை நீங்கள் விளங்கிக்கொள்ளுங்கள்!

இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணுங்கள், அப்போது புலிகள் தானகவே மறைந்துவிடும். உண்மையான புலிகள் இருப்பதாக நான் நினைக்கவில்லை. சில காலத்துக்கு முன்னர் தமிழர்கள் கள்ளத்தோணிகள் என்று அழைக்கப்பட்டனர். இப்போது ஒவ்வொரு தமிழனும் புலி.

ஜாபீர் ஏ. காதர்:- முஸ்லிம்கள் நாடு முழுவதும் வாழுகிறார்கள். அவர்கள் எப்படி வாழுகின்றனர்?

கதிரவேற்பிள்ளை:- இந்தச் சட்டமூலத்தின் மூலம் நீங்கள் சாதித்துள்ளதுதான் என்ன? சில ஆண்டுகளுக்கு முன் ஒவ்வொரு தமிழனும் 'கள்ளத்தோணி' இன்று ஒவ்வொரு தமிழனும் புலி. அதைத்தான் நீங்கள் செய்திருக்கிறீர்கள், எனவே இப்படியான சட்ட மூலத்தை நீங்கள் முன்வைக்கும் பொழுது...

ஜாபீர் ஏ. காதர் சிங்களப் பிரதேசங்களில் நாங்கள் பல நூற்றாண்டுகளாக சமாதானத்துடனும், அன்புடனும் வாழ்ந்துவருகிறோம். அவர்களும் ஏன் அதேபோல வாழமுடியாது?

அனுரா;- அத்துடன் சுதந்திரமாகவும்!

அமிர்தலிங்கம்:- நாமே எங்கள் தலைவிதியை முடிவு செய்வோம். கொழும்பு மத்தியின் இரண்டாவது உறுப்பினர் எமக்கு ஆலோசனை கூறவோ கட்டளையிடவோ வேண்டியதில்லை!

சபாநாயகர்:- அவருக்கு முழுச் சுதந்திரம் உண்டு—

அமிர்தலிங்கம்:- "லிபேர்ட்டி" (சுதந்திரம்) என்பது ஒரு சினிமா என்பதே அவரது கருத்து!

ஜாபீர் காதர்:- அதிலே அதிகம் தமிழர்கள் வேலை செய்கிறார்கள்!

கதிரவேற்பிள்ளை:- நீங்கள் தவறான பொலிஸ் தகவல்களை பயன்படுத்துகிறீர்கள். அவர்கள் (பொலிசார்) உங்கள்மீது சவாரி விடுகிறார்கள். யாரையும் எவரையும் வாழ்க்கை முழுவதும் தடுப்புக்காவலில் வைக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்குகிறீர்கள். தடுப்புக்காவலில் வைக்கப்படும் ஒருவர், வேறு எவரையும் சந்திப்பதற்கு தடைவிதிக்கபபடலாம். தடுப்புக்காவலின் முக்கிய நோக்கங்களில் அதுவும் ஒன்று. அது ஒரு தனிமைச் சிறையாக இருக்கப்போகிறது. அதுபற்றியெல்லாம் நீங்கள் ஆராய்ந்தீர்களா? முந்திய அரசாங்கத்தின் காலத்தில் நடைபெற்றது போன்ற சித்திரவதைகள், தடுப்புக்காவலில் வைக்கப்படும் ஒருவருக்கு நடைபெறுமல் தடுப்பதற்கு விதிகள் கொண்டுவருகிறீர்களா? (குறுக்கீடுகள்)

கௌரவ தபால் தந்தி தொடர்பு அமைச்சருக்கு தவறான அடையாளம் காட்டப்படும் பிரச்சினைபற்றித் தெரியும். முன்பு தடுப்புக் காவலின்றி, பொதுமக்கள் துன்புறுத்தப்பட்டார்கள். இப்போது தடுப்புக்காவலில் வைக்கும் அதிகாரத்தையும் அவர்களுக்கு (பொலிசாருக்கு) கொடுக்கிறீர்கள். இனி அவர்கள் துன்புறுத்தலில் ஈடுபடுவார்கள். இவையெல்லாவற்றையும் ஆலோசித்து, நீங்கள் எத்தகைய சூழ்நிலையை உருவாக்குகிறீர்கள் என்பதை தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள்! நீங்கள் தவறாக வழிநடத்தப்படுகிறீர்கள். பொலிசார் உங்களுக்கு கொடுத்த தகவலே, உங்களை திகிலடையச் செய்து, இந்த முட்டாள்தனமானதும் அபாயகரமானதுமான சட்ட மூலத்தை கொண்டுவரும்படி செய்து விட்டது. நன்றி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எமது மனச்சாட்சி தூய்மையாக இருக்கும்வரை கறைபூசுவதால் நாம் கதிகலங்கமாட்டோம்!"

—2-ம் பக்கத் தொடர்

படுத்தும் முயற்சிகள்—மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நான் ஆரம்பத்தில் கூறியதுபோல, கூட்டணிக்கும் எவ்விதமான வன்முறைகளுக்கும் தொடர்பு கிடையாதென் பதுமாத்திரமல்ல—இம்மாதிரியான வன்முறைகளை நாம் முற்றாக நிராகரிக்கிறோம். என்பதை நான் முதலும் முடிவுமாக இங்கே திட்டவட்டமாக கூறிவைக்க விரும்புகிறேன்.

நான் இந்தப் பத்திரிகை அறிக்கைகளைப் படித்துக் கொண்டிருப்பதிலே நேரத்தைச் செலவிடவிரும்பவில்லை. "வீக்என்ட்" சன் பத்திரிகை தனது 23-4-78 இதழில் "Tigers offer free-land, Estate workers duped into political Ideology" (புலிகள் இலவச நிலம் வழங்குகின்றன, அரசியல் இலட்சியத்தின் பெயரால் தோட்டத் தொழிலாளர்கள்ஏமாற்றப்படுகிறார்கள்) என்ற தலைப்புடன் செய்தி வெளியிட்டிருந்தது. வீரகேசரியில் இந்தக்கடிதம் 28-4-78ல் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது. குறித்த வீரகேசரி புதினப் பத்திரிகையில்கடிதம் வெளியிடப்பட்ட திகதி 28-4-78 கடிதம் எழுதப்பட்டிருந்த திகதியோ 25-4-78.

உறுப்பினர்கள்:- அது அரசாங்கத்துக்கு சார்பான பத்திரிகையா?

அமிர்தலிங்கம்:- ஆம், அரசாங்க ஆதரவுப்பத்திரிகைதான் ஐயா, புலிகளின் சில நடவடிக்கைகள் பற்றிக் கூறும் இந்தச் செய்தி 'சன்' பத்திரிகையில் 23-4-78ம் திகதியிலேயே வெளியிடப்பட்டிருக்கிறது.

எனவே புலிகளின் மூலம் எங்கிருந்து தொடங்கியது, எங்கு ஆரம்பமாகியது என்பதை ஒருவர் இதிலிருந்து அனுமானித்துக் கொள்ள முடியும்!

உண்மையில் இரண்டு நாட்களுக்கு முன்னமே 'சன்' குழுப்பத்திரிகைகள், 'புலிகளை' பற்றிப் பேசத் தொடங்கிவிட்டன. நாமெல்லாம் இந்தப் 'புலிகள்' எங்கிருந்து வருகின்றன என்பது பற்றி ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தோம். அப்போது திடீரென இந்த பத்திரிகை அறிக்கை காணப்பட்டது.

சுதந்திர வர்த்தக வலய ஆலோசனைச்சபைக்கு அரசாங்கத்தினால் நியமிக்கப் பட்டுள்ள திரு. ஞானம் என்பவரது பத்திரிகையே இது. இப்பத்திரிகை அரசாங்க சார்புடைய ஒரு முதலாளியால் நடத்தப்படுகிறது. இப்பத்திரிகை அரசாங்க சார்புடையதா என்று உறுப்பினர்கள் கேட்ட கேள்விக்கு திட்டவட்டமான எனது விடை 'ஆம்' என்பது தான்!

## தமிழர் புலிகள் ஆக்கப்படுகின்றனர்

அதுமட்டுமல்ல, எனக்கு கிடைத்த நம்பிக்கையான ஒரு தகவலின் படி புலிக்கடிதம் கிடைத்ததும், பொறுப்பானவர்கள் பொலிசுடன் தொடர்பு கொண்டு, "இக்கடிதத்தை நாம் என்னசெய்வது?" என்று கேட்டிருக்கிறார்கள்—அப்போது பொலிசில் மிக உயர்ந்த இடத்திலிருப்பவர், அதைப் பிரசுரிக்கும்படி கூறியிருக்கிறார். அதற்குப்பின்னர்தான் இந்தக்கடிதம் பத்திரிகையில் "போட்டோ ஸ்ராட்" படமாக போடப்பட்டது. எனவே, இது ஒரு கருத்தை பதியவைப்பதற்காக பொலிசாரால் திட்டமிட்டுக் கட்டியெழுப்பப்பட்டதாகும். அல்லாவிடின், பொலிசில் உச்சத் தானத்திலிருக்கும் ஒருவர், எதற்காக கடிதத்தை பிரசுரிக்கும்படி பத்திரிகைக்கு உத்தர விட வேண்டும்?

இந்தச் சட்டமூலத்திலுள்ள செய்திகளை தணிக்கை செய்யும் ஒரே யொரு அம்சத்தை மட்டும் நான் வரவேற்கிறேன், இந்தப் பத்திரிகை அறிக்கைகளின் விளைவாக, அரசாங்க அலுவலகங்களிலே சிங்கள உத்தியோகத்தர்கள், தமிழ் உத்தியோகத்தர்களை "புலிகள்" என்று அழைக்கத் தொடங்கியிருப்பதாக நான் அறிகிறேன். அந்தச் சூழ்நிலை இன்று ஆரம்பமாகிவிட்டது. இது எங்கு போய் முடியுமோ எமக்குத் தெரியாது. எங்களைப் புலிகள் என்றுநீங்கள் அழைத்தாலும் சரி வேறு எப்படி அழைத்தாலும்சரி, எமக்கு அதுபற்றி அக்கறை கிடையாது. (இடையீடுகள்) ஆனால் அரசாங்க அலுவலகங்களில், பத்திரிகைகள் வெளியிட்டு வந்த அறிக்கைகள் காரணமாக ஏற்பட்டிருக்கும் பதட்டமான நிலையை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். எனவே இச் சட்டமூலம், இம்மாதிரியான பத்திரிகைகளின் பொறுப்பற்ற போக்கை தடுத்து நிறுத்தக் கூடியது என்கிற அந்த ஒரு அம்சத்தை மட்டும் வரவேற்கிறேன்.

அதுமட்டுமல்ல —புதினப் பத்திரிகைகள் பரபரப்புக்காக இத்தகைய செய்திகளை வெளியிட்டுவருவதை நாம் அறிவோம். என்னுடைய கையில் 19-5-78 வெளிவந்த 'சன்' பத்திரிகை இருக்கிறது—

ஓர் உறுப்பினர்:- உங்கள் 'சன்' (மகன்)

அமிர்தலிங்கம்:-எனதுமகன்? எனது மகனைப்பற்றி நான் பிறகு வருகிறேன். உண்மையில் இன்றைய ஜனாதிபதி அன்று எதிர்க்கட்சித்தலைவராக இருந்தபோது அவரது மகனுக்கு கறை பூசுவதற்கு எப்படி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவோ, அதேபோன்றுதான் இப்போது எனது மகனுக்கும் கறைபூச முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்படியான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமென்று எனக்குத் தெரியும். இந்த நாட்டுக்கு வெளியே பல ஆண்டுகளாக எனது மகன் இருந்து வந்தபோதிலும், வேறு பலருடன் அவனது புகைப்படத்தையும் பிரசுரித்திருப்பது எனக்குத் தெரியும்.

ஆர். பிரேமதாசா:- எங்கே வெளியிடப்பட்டது?

அமிர்தலிங்கம்:- கௌரவ கைத்தொழில் விஞ்ஞானத் துறை அமைச்சர் அந்த சுவரொட்டியை கையில்வைத்திருக்கிறார். எனவே அது ஏதோ ஓர் புதிய விடயமல்ல. சில மணித்துளிகளுக்கு முன்புதான், அன்றைய எதிர்க்கட்சித்தலைவராக இருந்த இன்றைய ஜனாதிபதியின் மகனுக்கு என்ன நடந்தது என்பதைப் பற்றி பிரதமர் இங்கு தமது உரையில் குறிப்பிட்டார். ஆகவே எதையும் யாரும் செய்ய முடியும்—கறை பூசும் பிரசாரத்தை நீங்கள் எவ்விதமாகவும் நடத்தலாம்—நீங்கள் அவ்வாறு செய்வதை வரவேற்கிறேன். எங்கள் மனச்சாட்சி தூய்மையாக இருக்கின்றவரை, எம்மீது யார் கறைபூசமுயன்றாலும்-அவர் எவ்வளவு உயர்ந்த பதவியிலிருப்பவரானாலும்-நாங்கள் பயப்படப் போவதில்லை!

10-5-78ல் வெளியிடப்பட்ட 'சன்' பத்திரிகைகள், "Tigers maul again" (புலிகள் மீண்டும் தலையெடுக்கின்றன) என்ற தலைப்பில் ஒரு செய்தியை வெளியிட்டிருந்தன. அந்தச் செய்தியில் யாழ் மருத்துவ மனையில் யாரோ ஒருவர் சுடப்பட்டதாக அவர்கள் கூறியிருந்தார்கள். அதற்கு இடப்பட்டிருந்த தலைப்போ, "Tigers maul again"!

நான் இந்தச் சம்பவத்தின் உண்மைபற்றி அறிந்து கொள்ள முடிந்தது. இது சங்கானை யென்னும் கிராமத்தில் இருவருக்கிடையே ஏற்பட்டிருந்த ஒரு தனிப்பட்ட தகராறு. ஒரு மனிதர் காயப்பட்டுமருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்தார். அவரை தாக்கியவர் மருத்துவமனைக்கு சென்று அவர் உயிருடன் வாழ மாட்டாரென்று பயமுறுத்தியிருக்கிறார். எனவே அந்த மனிதன் மருத்துவமனையிலிருந்து துண்டுவெட்டிக்கொண்டு சென்று விட்டார். அவர் படுத்திருந்த படுக்கை வேறொருவருக்கு கொடுக்கப் பட்டது. முன்பு பயமுறுத்திய மனிதர் எங்கோ நின்று, அந்தப்படுக்கையை நோக்கிச்சுட்டிருக்கிறார். அங்கு இதனால் இருந்த நோயாளி காயமடைந்ததாக அறிகிறேன்-இதற்கும் வேறுவகையான 'இயக்கம்' எதற்கும் தொடர்போ அல்லது இதற்கு வேறு உண்மைகளோ கிடையாது. இதில் சம்பந்தப்பட்ட ஆட்களையும், இச் சம்பவம் நிகழ்வதற்கான சூழ்நிலைகளையும் நான் தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன்;

இப்படியான ஒரு சம்பவத்துக்கு "புலிகள் மீண்டும் தலையெடுக்கின்றன" என்று தலையங்கம் கொடுத்தால், இந்த நாட்டிலுள்ள மக்களுக்கு ஓர் அங்கலாய்ப்பு ஏற்பட்டு, அவற்றை எப்படியும் பிடிக்கவேண்டும் என்று ஆர்வம் ஏற்பட்டு அந்த நடவடிக்கைக்கு அவர்களை இழுத்து விட்டு விடும்.

## அகதிகள் குடியேற்றம்

"தோட்டத் தொழிலாளர்கள் அரசியல் தத்துவத்துக்குள் இழுத்து வரப்படுகிறார்கள்" என்று 'சன்' பத்திரிகையில் வந்த செய்தி பற்றி இங்கு சுட்டிக்காட்டினேன். இந்தச் செய்திக்கதை, 'டெயிலி நியூஸ்' பத்திரிகையிலும் "சண்டே ஒப்சேவர்' பத்திரிகையிலும் கூட திரும்பத்திரும்ப பிரசுரிக்கப்பட்டிருந்தன. [illegible] 'ஒப்சேவர்' பத்திரிகையில் காணிகள் வாங்குவதற்கு புலிகளுக்கு வெளிநாடுகளிலிருந்து நிதி" என்ற தலைப்பில் இதே செய்தி வெளியிடப்பட்டிருந்தது. அதிலே அவர்கள் குடியேற்றத்திட்டங்களைப்பற்றி குறிப்பிட்டிருந்தார்கள்,

"வவுனியாவின் சில பகுதிகளிலுள்ள தனியார் காணிகளிலும், அரசாங்கம் காணி வழங்கியுள்ள விஸ்வமடு போன்ற சில பகுதிகளிலும், இடம் பெற்றிருக்கும் அகதிகள் குடியேற்றத்திட்டங்களை ஒரு முறை நேரடியாக அப்பகுதிக்கு விஜயம்செய்து அவற்றைப்பார் வையிட்டு தம்மைத் திருப்திப்படுத்திக் கொள்ளுமாறு பிரதமர் அவர்களை நான் அழைக்கிறேன். தங்கள் சொத்துக்களை இழந்து, தங்கள் உறவினர்களை இழந்து, சிலர் தமது அருமை மகளின் கற்பையும் பறிகொடுத்து. சிலர் தமது பிள்ளைகளை கொலைக்களத்தில் பறிகொடுத்து, வாழ்க்கையில் ஆகக்கூடிய துன்பத்தை அனுபவித்த பரிதாபத்துக்குரிய மக்கள் எப்படியோ தப்பிப்பிழைத்து, அகதிகளாக வடக்கு நோக்கி ஓடிவந்து இன்று அந்த நிலங்களையே ஆதாரமாகக் கொண்டே தங்கள் வாழ்வை மீண்டும் அமைத்துக் கொள்ள பாடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த பரிதாப நிலையை பிரதமர் அவர்கள் சென்று பார்த்து தமக்குள்ளே தீர்மானிக்கட்டும்—பத்திரிகைகளில் வெளியிடப்படும் செய்திகள் உண்மையா அல்லது இது ஓர் திட்டமிட்ட வேறு ஒரு கெட்ட நோக்கத்துடன் இந்நாட்டிலுள்ள தீயசக்திகளால் உருவாக்கப்படும் கட்டுக் கதைகளா என்பதை நேரடியாகப் பார்த்த பின்னர் பிரதமர் அவர்களே, தீர்மானிக்கட்டும்.

## குளுக்கோஸ்வீரர் கட்டுரை

கடந்த ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 16ம் திகதி கலவரம் வெடிப்பதற்கு முன்னர் சன்' இதழில், ஆகஸ்ட் 11, 12ம் திகதிகளில் பிரபல "குளுக்கோஸ் உண்ணாவிரத" பேராசிரியர் திரு. எப். ஆர், ஜெயசூரியா எழுதிய இரண்டு கட்டுரைகள் வெளியிடப்பட்டிருந்தன. இந்தக்கட்டுரைகளோ இனக்கலவரமும் வன்முறையும்வெடிப்பதற்கு ஒரு முக்கிய காரணியாக அமைந்திருந்தது. "இந்த நாட்டில் தமிழர்களுக்கு இடமில்லை—அவர்கள் இந்நாட்டைவிட்டு வெளியேறி இந்தியாவுக்கு ஓடட்டும்" என்பதே அக்கட்டுரைகளில் வலியுறுத்தப் பட்டிருந்த பொருளாகும். பிரபல பேராசிரியர் தமது கட்டுரையில் எதைகூறியிருந்தாரோ, அதையேகாடையர்கள் தொடர்ச்சியாக வன்முறை நிலவிய அந்த இரண்டு வார காலமாக இந்நாட்டில் செய்து கொண்டிருந்தார்கள்;

இம்மாதிரி பரப்பப்படும் கதைகள், இந்த நாட்டு மக்கள் மத்தியில் எவ்வளவு தூரம் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை இச்சபையினதும், கௌரவ உறுப்பினர்களதும் கவனத்துக்கு கொண்டுவரவேஇதை இங்கு குறிப்பிட்டேன்.

யாழ்ப்பாணத்துக்கு ஒருவர் செல்லுவாரானால், அங்கு இவ்வாறான வன்செயல்கள் கிடையாது என்பதை உணர முடியும். முருங்கன் காட்டுக்குள் நடைபெற்றதாகசொல்லப்படும் துப்பாக்கிச்சூடு பற்றி — மன்னாரிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஓர் மாநாட்டுக்காக வந்திருந்த பிரதி பொது நிர்வாக உள்நாட்டமைச்சர் அவர்கள் கூறியபோதுதான் நான் முதன்முதலாகக் கேள்விப் பட்டேன். அந்த மாநாட்டின்போதுதான் அமைச்சர் இந்த விஷயத்தை எமக்கு எடுத்துக்கூறினார்; அப்போதுதான் முருங்கன் சம்பவம் பற்றி முதல்முறையாக நாங்கள் கேள்விபட்டோம்.

எனவே அப்படியொரு சம்பவம் நடந்துவிட்டது என்பதற்காக — முழுத் தமிழ் மக்களுக்கும் எதிரான விரோத உணர்ச்சியை நீங்கள் தட்டியெழுப்ப முயற்சிக்கவேண்டுமா? இந்தச் செய்தி அறிக்கைகளின் விளைவே இதுதான், உண்மையில் தமிழ் பொலிஸ் அதிகாரிகள் மீது கூட — அவர்கள் விஷயங்களை அமத்தி வைப்பதாக — அவர்களுக்கு எதிராகவும் புகார்ப்பட்டியலை சுமத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன, "சண்டே ஒப்சேவர்" பத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது—

"கடந்த பொதுத்தேர்தலின்போது, ஒரு குறிப்பிட்ட அரசியற் கட்சியின் கூட்டங்களை கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த சில பொலிசார், அக்கூட்டங்களில் அக்கட்சியின் உறுப்பினர்கள் நிகழ்த்திய தூண்டுதல் பேச்சுக்களைப் பற்றிய சரியான குறிப்புக்களைத் தங்கள் தங்கள் பகுதி பொலீஸ் நிலையங்களுக்குத் தாக்கல்செய்யவில்லையென்று தெரியவந்துள்ளது. இந்தப் பிழையான குறிப்புக்களுக்கும், வடக்கில் நடைபெறும் வன்முறைகள் பற்றி கட்சி கடைப்பிடிக்கும் மௌன நிலைக்கும் ஏதாவது தொடர்பு இருக்குமாஎன்பதுபற்றி விசாரணையாளர்கள் ஆராய்ந்து வருகின்றனர்."

பிரதிச் சபாநாயகர் அவர்களே, இம்மாதிரியான கதைகள் பரப்பப்படுவதன் உள்நோக்கம் என்ன? தமிழ் சமுதாயத்தின் எந்தப் பிரிவினரும் விட்டுவைக்கப் படவில்லை. மதத்தலைவர்கள் இழுக்கப்படுகிறார்கள்: அரசியற் கட்சிகள் இழுக்கப்படுகின்றன; பொலிசாரே இழுக்கப்படுகிறார்கள். புலிகளுடன் ஏதாவது ஒருவகையில் தொடர்புகொண்டவர்கள் என்று ஒவ்வொருவருமே இழுக்கப்படுகின்றனர் அரசாங்க ஊழியர்கள் இழுக்கப்படுகின்றனர்!

தமிழ் மக்கள் அனைவரையுமேபுலிகளுடன்சம்பந்தப்படுவதற்கு இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன; புலிகளுக்கு எதிராக பொலிஸ் மா அதிபர் பிரகடனப்படுத்தியுள்ள யுத்தம், தமிழ் மக்களுக்கு எதிரான ஒரு யுத்தமே! இத்தகைய முயற்சியொன்று இன்று திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

—வளரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,

எமது சிரேஷ்ட புத்திரன்,
திருநிறை செல்வன்
**மெற்ருஸ்மயில்** (பி. ஏ. சிறப்பு)
(கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்) அவர்களுக்கும்

நல்லூர், வி. இரத்தினம் தம்பதிகளின் ஏக புத்திரி
திருநிறை செல்வி
**ரஞ்சிதமலர்**
அவர்களுக்கும்

நல்லூர், திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில்

திருமணவிழா திருவருள் நலத்தினுல் இனிது நடைபெறும்.

| திருமண வைபவம் | ஆசியுரை வைபவம் | சிறப்பு வைபவம் |
|---|---|---|
| வைகாசிமீ 24ந்உ (7-6-78), புதன் கிழமை காலை 6-31 மணிக்கு. | தலைவர்: பேராசிரியர், சு. வித்தியானந்தன் (தலைவர், யாழ்-வளாகம்) காலை 8 மணி | காலை 10-30 மணி முதல் 1-30 மணிவரை நடைபெறும். |

புதுக்குடியிருப்பு, மணமகன் இல்லத்தில் வரவேற்பு வைபவம் மாலை 6 மணிக்கு நடைபெறும்,

இத் திருமண விழாவில் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து
மணமக்களை வாழ்த்தியருளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்ருேம்.

கொண்டாட்டம் 2 நாட்கள் வரை நடைபெறும்.

இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்,

வ/புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

திருமதி செல்லையா - இரத்தினபூபதியும்
குடும்பத்தினரும்


**நண்பர்கள் தேவையா**



தோழர் - தோழியர்களின் விலாசங்களும், படங்களுடன் நட்புறவு விபரங்களுமடங்கிய தொகுப்புப் பிரதியை தபாலில் பெற்றுக் கொள்ள விண்ணப்பியுங்கள்:

The Penpals Leader,
Chandrothaya International
Borella, Colombo-8;

**மெழுகுவர்த்தி**

அமரர் டாக்டர் நாகநாதனின் சரித்திரம்
சிலம்புச்செல்வர் ம.பொ.சி, மதிப்புரையுடன்
நூலாசிரியர்: கரிகாலன்
விலை: ரூபா 5-00
கிடைக்குமிடம்;-
சுதந்திரன் அலுவலகம்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

## கிங்ஸ்லி
(கொழும்பு)

-எஸ். எஸ். ஆர்., தேவிகா நடித்த-

**அன்பு எங்கே**

12-வது வாரம்

## வெலிங்டன்
(யாழ்நகர்)

சிவாஜி, கே. ஆர். விஜயா நடித்த—

**கிரகப்பிரவேசம்** (கலர்)

## கெப்பிட்டல் (கொழும்பு)
7-வது வாரம்

எம் ஜி. ஆர்., ஜெயலலிதா
விஜயகுமாரி நடித்த-

**கணவன்**

எமது அடுத்த வெளியீடு பாலச்சந்தரின்
**மன்மத லீலை** (கலர்)

## லிடோ (யாழ்நகர்)
2-வது வாரம்

சிவகுமார், ஹிந்தி நடிகை அலகா,
ஸ்ரீகாந்த், மனோரமா நடித்த-

**மதனமாளிகை** (கலர்)

## செல்லமகால்
(கொட்டாஞ்சேனை)
14-வது வாரம்



எம். ஜி. ஆர். (இரு வேடங்களில்)
வாணிஸ்ரீ, நிர்மலா, பி. எஸ். வீரப்பா,
தேங்காய் சீனிவாசன் மற்றும் பலர் நடித்த—

**ஊருக்கு உழைப்பவன்**

5-வது வாரம்

## கெயிட்டி [கொட்டாஞ்சேனை]

முத்துராமன், அசோகன், தேங்காய்
சீனிவாசன், விஜயகுமார், சந்திரகலா
ஆகியோர் நடித்த—

**காலங்களில் அவள் வசந்தம்**

## றீகல்
மட்டுநகர்
3-வது வாரம்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

**கிரகப்பிரவேசம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை கொழும்பு - 12, 194 ஏ, பண்டாரநாயக்கா வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு ஜூன் 4-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது; அச்சுப்பதிப்பு: வலியன் அச்சகம், பிரதான வீதி, யாழ்ப்பாணம்.